Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

G. M. K.
COMMUNICATION
302, Temple Rd, Nallur, Jaffna.
TP:- 021-2223760 FAX:- 021-4591194
♥ IDD ♥ LOCAL ♥ NET 2 PHONE (7/=)
♥ FAX ♥ PHONE CARDS ♥ COMPUTER WORKS
♥ AIR TICKETING ♥ BUS BOOKING

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 06 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 08 (21.12.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:82

சாவகச்சேரியில் நேற்று நடைபெற்ற மக்கள் எழுச்சிப் போராட்டத்திலிருந்து....





# பேச்சுக்களை ஆரம்பிக்க வலியுறுத்தி சாவகச்சேரியில் மக்கள் போராட்டம்!

## இரண்டு மணிநேரம் வழமை நிலை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

**இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியும் –**

**அரசாங்கத்தின் யுத்த முனைப்புக்களைக் கண்டித்தும் நேற்றுக் காலை சாவகச்சேரி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

சாவகச்சேரியில் நேற்றுக்காலை [illegible] மணியளவில் வீதியின் இரண்டு பக்கங்களிலும் பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச அலுவலர்கள், வங்கியாளர்கள், வர்த்தகர்கள், பொதுமக்களென ஆயிரக்கணக்கானோர் வீதியின் இரு பக்கங்களிலும் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக மக்கள் அனைவரும் ஒன்று கூடி, எமது உயிர் போனாலும் உரிமையை இழக்க மாட்டோம் என்ற பதாகையை ஏந்தியவாறும், கோஷம் எழுப்பியும், சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தை வந்தடைந்தனர்.

சாவகச்சேரி பஸ்தரிப்பு நிலையத்தில், சமாதானத்தை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும் வகையிலான கூட்டம், சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என். ரவிராஜ், பத்மினி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்கள் சேகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

கிழக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனங்களின் போதிய உதவியின்றி அல்லற்படும் எமது உறவுகளுக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்கும் உதவிகளை ஒருமுகப்படுத்தி - சேகரித்து உரிய முறையில் கொண்டுசென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக "கிழக்கின் வெள்ள அனர்த்தத்துக்கு வடக்கு உறவுகளின் உதவிப் பயணம்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இலக்கம் 43, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்த அமைப்பு - உணவுப் பொருட்கள், பால்மா, மருந்து வகைகள், சிறுவர்களுக்கான புதிய உடைகள் என்பவற்றை சேகரித்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுப்பிவைக்கவுள்ளது.

சனசமூக நிலையங்கள் மற்றும் நடமாடும், வாகனங்களின் மூலம் சேகரிக்கப்படும் உதவிப் பொருட்கள் எதிர்வரும் 25 ஆம் திகதி வாகனத் தொடரணி மூலம் கிழக்கு மாகாணத்துக்கு கொண்டு செல்லப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு பதிலாக யுத்தத்தை திணித்தால் அதனை எதிர்கொள்வதற்கும் நாம் தயார்!

## தென்மராட்சி பொது அமைப்புக்கள் ஜனாதிபதிக்குக் கடிதம்



(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை யோசனையின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்தவேண்டும். இதனை விடுத்து யுத்தம் ஒன்றை தமிழ் மக்கள் மீது திணித்தால் அதனை எதிர்கொள்ளவும் நாம் தயாராகவுள்ளோம்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்குமிடையில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டு மூன்று ஆண்டுகளாகின்றன. இந்த உடன்படிக்கையானது நீண்டகால யுத்தத்தால் பாதிப்படைந்த தமிழ் மக்களின் இயல்புவாழ்க்கையைக் கட்டியெழுப்புவது, பேச்சுவார்த்தைகளின் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதுஎன்பவற்றை மையமாகக் கொண்டு சர்வதேச அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்டது என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

மூன்று ஆண்டுகளாகியும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்ப முடியாது இன்னும் அகதிகளாக அலைகின்றனர். சொந்த நிலங்களில் விவசாயம் செய்ய முடியவில்லை. இராணுவக் கெடுபிடிகள் முன்னரைப் போலவே தொடர்கின்றன. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படாது - வேண்டுமென்றே இழுத்தடிக்கப்படுகின்றது.

யுத்தநிறுத்த உடன்படிக் கையைப் பயன்படுத்தி இந்தக் காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக மக்கள் உணர்ந்துள்ளனர். அரசாங்கம் யுத்தத்துக்கான சகல தயாரிப்புக்களிலும் ஈடுபட்டு வருகின்றது. யுத்த விமானங்கள், கப்பல்கள், தளபாடங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு என இராணுவ கட்டமைப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளதை சர்வதேச உள்ளூர் இராணுவ ஆய்வாளர்கள் புள்ளிவிபரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளனர்.

2005 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் 7000 கோடி ரூபாவுக்கு மேல் பாதுகாப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிங்கள மக்களிடையே [illegible] விரோதப் பரப்புரைகள் மிக மோசமாக முன்னெடுக்கப்படுகின்றன ஜே.வி.பி,

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - நோர்வே உரையாடல் ஒட்டுக் கேட்கப்பட்டது அம்பலம்!

(நோர்வே)

விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேத் தூதுவர் மற்றும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஆகியோருக்கிடையில் பரிமாறப்பட்ட தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள தகவல் தற்போது அம்பலமாகியுள்ளது.

இலங்கையில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையம் நோக்கி என்ற தலைப்பில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இரட்டை வேடம் போட்டு ஜே.வி.பி. சமாதானத்துக்கு தடையாக உள்ளது!

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் தொடர்பாக இரட்டைக் கொள்கையைக் கடைப்பிடித்து வரும் ஜே.வி.பி - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணபதற்குத் தடையாகவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வெளியிட்ட அறிக்கையில் -

நோர்வேயின் சமாதான ஏற்பாட்டை எதிர்க்கும் ஜே.வி.பி. தொடர்பாக, சர்வதேச சமூகத்தின் நிலைப்பாட்டுடன் ஐ.தே.க இணைந்து கொள்கிறது. சமாதானம் தொடர்பாக இரட்டைக்கொள்கையை வெளிப்படுத்தி

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்செயலால் பாதிக்கப்பட்டோரின் விபரங்கள் ஜனாதிபதி செயலகத்தால் கோரப்பட்டுள்ளது!

வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்கப் படவிருக்கின்றது. இதற்கான விண்ணப்பங்களை ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

நாட்டில் 01.01.1981 தொடக்கம் 31.12.1984 வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட வன்செயல் பாதிப்புத் தொடர்பான உண்மைகள் அறியும் ஆணைக்குழு ஒன்று 2001 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகாவால் நியமிக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு வன்செயல் பாதிப்புக்கள் தொடர்பான அழிவு விபரங்களை கோரிப் பெற்றிருந்தது.

2001 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்த ஆணைக்குழுவுக்கு விண்ணப்பிக்க முடியாமல் போன பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது மரபுரிமையாளர்களிடமிருந்து ஜனாதிபதியின் செயலாளர் டபிள்யூ.ஜே.எஸ்.கருணாரத்ன விண்ணப்பங்களைப் கோரியுள்ளார்.

குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது அவர்களது மரபுரிமையாளர்கள் - உறுதிப்படுத்தக்கூடிய ஆவணத்தை இணைத்து, முழுப்பெயர், அடையாள அட்டை அல்லது பாஸ்போர்ட் இலக்கம், தற்போதைய முகவரி, தொலைபேசி பக்ஸ் இலக்கங்கங்கள் இருப்பின் அவை பற்றிய விபரம் ஈ-மெயில் இருப்பின் அதன் முகவரி, சம்பவம் (இன வன்செயல் அழிவு) நடைபெற்ற முகவரி, அக்காலத்தில் குடியிருந்த முகவரி, அக்காலப் பகுதியின் நிரந்தர முகவரி, ஏற்பட்ட சேதத்தின் தன்மை, ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி, அவற்றை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள், இதற்கு முன் இழப்பீடு எவையும் பெறப்பட்டிருப்பின் அவைகளையும் குறிப்பிட்டு,

விண்ணப்பத்தை எதிர்வரும் ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் - செயலாளர், நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சு, இல.177, காலி வீதி, கொழும்பு -03 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இக்காலப் பகுதியினுள் இனவன்செயல் பாதிப்புக்களுக்குள்ளாகி, தற்போது வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (31)

மந்திகை ஆதார வைத்தியசாலையின்

# சத்திரசிகிச்சைப் பிரிவு மூடப்படும் நிலையில்!

(பருத்தித்துறை)

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒரு வருட காலமாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் கடமையாற்றிவந்த மயக்க மருந்து நிபுணர் 'பியர்' சேவைக்காலம் முடிவடைந்து தனது சொந்த நாடான பிரான்ஸுக்குத் திரும்பவுள்ளார்.

இவர் மயக்கமருந்து நிபுணர் மட்டுமல்லாது சில சந்தர்ப்பங்களில் நோயாளர்களைப் பார்வையிட்டு கிளினிக்குகளையும், சிறு சத்திர சிகிச்சைகளையும் செய்து வந்தார்.

தற்போது இவர் செல்வதால் மந்திகை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக் கூடம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

மயக்கமருந்து நிபுணர் ஒருவர் நியமிக்கப்படாமையால் சிறு சத்திர சிகிச்சைகளுக்கெல்லாம் நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கே அனுப்பவேண்டியுள்ளதாக மந்திகை அரசினர் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (14)

## விபத்தில் இருவர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் நேற்று மாலைஇடம்பெற்ற மோட்டார் சைக்கில் விபத்தில் இருவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த சரசாலை வடக்கைச் சேர்ந்த கபில்ராஜ் (வயது 17) என்ற இளைஞனும் வீதியைக் கடக்க முற்பட்ட ஜெயக்குமார் ஜென்சி என்ற ஆறு வயது சிறுமியுமே காயமடைந்தனர். (29)

## வரிகள் அறவிட தீர்மானம்!

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபாதை வியாபார வர்த்தகத் தொழில் உரிமைக் கட்டணங்கள், வியாபார வரிகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு ஜனவரி முதலாம் திகதி முதல் அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக் கட்டண விபரங்களை அலுவலக நேரத்தில் பார்வையிட முடியும் என நகரசபையின் விசேட ஆணையாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்தார். (29)

## கட்டாக் காலி நாய்கள் சாவகச்சேரியில் அழிப்பு!

சாவகச்சேரி நகரசபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பெருமளவு கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்பட்டன.

மேலும் பல இடங்களில் கட்டாக்காலி நாய்களைப் பிடிப்பதற்கான நடவடிக்கையை நகரசபை அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது. (29)

## சாவகச்சேரி வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பகுதியினர் திடீர் சோதனை!

காலாவதியான பொருட்கள் அழிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் சுகாதாரப் பிரிவினர் வர்த்தக நிலையங்கள், தேநீர்ச்சாலைகளில் திடீர் திடீரென சோதனை நடத்தி காலாவதியான பொருட்களை அழித்து வருகின்றனர்.

கடந்த சில தினங்களாக சாவகச்சேரி நகர் மற்றும் கிராமங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள், தேநீர் சாலைகளில் சுகாதாரப் பிரிவினர் சோதனை நடத்தி காலாவதியான பிஸ்கட், பால்மா வகை, உணவுப் பொருட்களைக் கைப்பற்றி அழித்து வருகின்றனர்.

தேநீர் கடைகளில் திறந்த நிலையில் காணப்பட்ட உணவுப் பொருட்களையும் அழித்தனர். (29)

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கான புதிய கட்டட

## முதலாம் கட்ட வேலைகள் முடிவடையும் நிலையில்!

(நெல்லியடி)

தனியார் கட்டடமொன்றில் நீண்ட நாட்களாக இயங்கிவரும் கரவெட்டிப் பிரதேச செயலகம், மக்கள் பங்களிப்புடன் கொள்வனவு செய்யப்பட்ட சொந்த நிலத்தில் சகல வசதிகளுடன் கூடிய கட்டடம் ஒன்றை நாவலர் மடத்துக்கு அண்மையாக அமைத்து வருகிறது.

இந்தக் கட்டடத்துக்கான முதலாம்கட்ட வேலைகளுக்காக வடக்கு கிழக்குப் பிரதேச அத்தியாவசிய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் 13.5 மில்லியன் வழங்கப்பட்டு அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் நிலையில் உள்ளன.

மேலும் இரண்டாம் கட்ட வேலைகளுக்காக ரூபா 8 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் 2005 ஏப்ரல் மாதத்துக்குள் கட்டட வேலைகள் முற்றாக முடிக்கப்பட்டு விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே இரண்டாம் கட்ட வேலைகளுக்கான கேள்விகள் ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்பட்டுள்ளன. (13)





மூவி மெண்டோ நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் வடமராட்சி மீனவருக்கு நடத்தப்பட்ட இயந்திரப் பயிற்சி மற்றும் வலைப்பின்னல் பயிற்சி ஆகியவற்றைப் படங்களில் காணலாம்.

அடுத்த ஆண்டில்

## 25 ஆயிரம் பனம் விதைகள் வடமராட்சி கிழக்கில் நடுகை!

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் 25 ஆயிரம் பனம் விதைகள் அடுத்த ஆண்டு நடுகை செய்யப் படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் ரி.ஜெயசீலன் மேற்கொண்டு வருகின்றார்.

கடந்தகால இராணுவ நடவடிக்கையின்போது வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் பனை வளங்கள் இராணுவ தேவைகளுக்காக முற்றாக அழிக்கப்பட்டன.

இதனைக் கருத்திற்கொண்டு தமிழர் தாயகத்தின் கற்பகதருவான பனைவளத்தை மீள உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகின்றது.

இதன்படி - குடத்தனைப் பகுதியில் 8 ஆயிரம் பனம் விதைகளும், மாமுனைப் பகுதியில் 10 ஆயிரம் பனம் விதைகளும், புதிதாக அமைக்கப்பட்ட குடத்தனை - மணற்காடு வீதியின் இருமருங்கிலும் 2 ஆயிரம் பனம் விதைகளும் பொது இடங்களில் 5 ஆயிரம் பனம் விதைகளும் என்ற அடிப்படையில் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளன. (14)

வவுனியாஅரங்காலயா பண்பாட்டுக் குழுவினரின்

## விடியலின் விம்பங்கள் தெருவெளி ஆற்றுகை!

(சுதுமலை)

வவுனியா அரங்காலயா பண்பாட்டுக் குழுவினரால் 'விடியலின் விம்பங்கள்' என்ற தெருவெளி அரங்காற்றுகை யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் ஆற்றுகை செய்யப்படுவதுடன் கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்று வருகின்றது.

யுத்தமோ சமாதானமோ அது மக்களின் மனங்களில் இருந்தே பிறக்கிறது, பிறக்கவும் வேண்டும். தமிழ் பேசும் மக்களாகிய நாம் ஐக்கியப்பட்ட, ஒன்றுபட்ட சக்தியாக திரண்டு நின்று உரிமைக் குரல் கொடுப்போம் என்ற தொனிப் பொருளில் இந்த ஆற்றுகை இடம் பெறுகின்றது.

25 இற்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குபற்றும் இந்தத் தெருவெளி நாடகமானது சிந்துநடைப் பாடல், இசைநாடகப் பாடல் பாணிகளைக் கொண்டு தெருவெளி இசை நாடகமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (91)

கையிருப்பைக் குறைக்கும் நோக்குடன்
மலிவு விற்பனை
05/= தொடக்கம் 50 /= வரையில் புத்தகங்கள்

| அப்பியாசப் புத்தகங்கள் | விலை |
| --- | --- |
| 1 கட்டு | 4.75 |
| 2 கட்டு | 9.25 |
| 3 கட்டு | 13.75 |
| 4 கட்டு | 18.25 |
| 5 கட்டு | 22.50 |

ரிச்சாட், அந்திவானப் பதிப்பகங்களின் அப்பியாசப் புத்தகங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212,கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.2225542
(C/3500)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
(குளிரூட்டப்பட்டது)
விக்ரம், கிரன், மனோரமா நடித்த
ஜெமினி
(ரீலஸ்)
காட்சி நேரம்: 10.30,2.30 மட்டும் (பு.நே)
தினசரி இரவு 6.30, 9.00 (பு.நே) மட்டும்
THE MUMMY RETURNS ஆங்கிலப் படம்

ராஜா யாழ்ப்பாணம்.
சிம்பு (இருவேடம்),
ஜோதிகா நடித்த
மன்மதன்
(ரீலஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30. 9.30 மட்டும்

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசன்னா, நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த
அழகிய தீயே
(ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
URASSIC PARK - 3

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும்
இந்தியாவிலும்
ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்),
சாயாசிங்,
லைலா,
வடிவேல் நடித்த



ஜெய் சூர்யா
கா.நே 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்பவே ஹெலி வசதி குறித்து தீர்மானம்!

## விமானப்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நோர்வே அனுசரணையாளர்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் ஆகியோரின் பயணங்களுக்கு விமானப்படையின் ஹெலிகொப்டர்களை வழங்குவதா? இல்லையா? என்பது அந்தந்த நிலைமைகளுக்கு ஏற்பவே தீர்மானிக்கப்படும் என விமானப்படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்தார்.

தியத்தலாவை விமானப்படை முகாமில் இடம்பெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு கருத்துத் தெரிவித்த அவர், நோர்வே அனுசரணையாளர்கள் கேட்டுக்கொண்டதற்கமைய ஜனாதிபதி சந்திரிகா - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் சொல்ஹெய்மின் நெருக்கடியான நிலைமைகளைக் கருத்தில் கொண்டே, கிளிநொச்சி செல்வதற்கு ஹெலிகொப்டரை வழங்கும்படி உத்தரவிட்டார். ஆனாலும், சீரற்ற காலைநிலை காரணமாக சொல்ஹெய்ம் ஹெலிகொப்டர் மூலம் கிளிநொச்சி செல்ல முடியவில்லை.

விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும், நோர்வேத் தரப்பினருக்கும் விமானப்படையினரின் விமானங்களை வழங்குவதில்லை என்ற தீர்மானம் - அண்மையில் சில காலங்களாக வடக்கிலும் - கிழக்கிலும் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலையை அடுத்தே எடுக்கப்பட்டது.

ஆனால், இந்தத் தீர்மானம் நடைமுறையில் உள்ள சமாதான நடவடிக்கைகளை எந்த விதத்திலும் பாதிக்காது.

முப்படைகளின் தளபதியாக உள்ள ஜனாதிபதி ஹெலிகொப்டர்களை வழங்குவதா? இல்லையா? என்ற தீர்மானத்தை எடுப்பதற்கு அதிகாரமுடையவர்.

விடுதலைப் புலிகளிடம் விமானப்படை இருப்பதற்கான புலனாய்வுத் தகவல்கள் எவையும் எமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், வன்னியில் விமான ஓடுதளம் உள்ளமை தொடர்பாகவும், 'அல்ராலைற்' மற்றும் 'மைக்ரோலைற்' விமானங்கள் விடுதலைப் புலிகளிடம் இருப்பது தொடர்பாகவும், எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

ஆனால், இவற்றால் விமானப் படையினருக்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை. ஆனால் விடுதலைப் புலிகள் விமானப் படைக்காக புதிய உறுப்பினர்களை ஆட்சேர்த்து வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மைய காலங்களில் விடுதலைப் புலிகள் - பொது மக்கள் மற்றும் இராணுவப் புலனாய்வுத்துறை உறுப்பினர்களை கொலைசெய்து வருவதால், நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி உள்ளமையாலேயே விமானப்படையினர் இந்த முடிவை எடுத்துள்ளதாக கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்குள் விமானப்பறப்புக்களை மேற்கொள்ளும்போது, விமானப் படையினர் பாரிய பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும், காலப்போக்கில் பாரிய அசம்பாவிதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்காகவே விமானப் படையினர் இத்தகைய முடிவை எடுத்துள்ளதாக அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பாகத் கருத்துத் தெரிவித்த சர்வதேச யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ஒஸ்கார் செலானஸ் தாம் சமாதான அனுசரணையாளர்களாகவே மட்டும் செயற்படமுடியும் என்றும், விமானப்படையினரது விமானங்களுக்கோ அல்லது விமானப்படையினருக்கோ தாம் பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கமுடியாது எனவும் தெரிவித்தார்.

## திரைப்படக் கூட்டுத்தாபனம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவின் மூலம் சண்டை, நடனம் மற்றும் இசைக்குழுக்கள் அமைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுக்களில் இடம்பெற விரும்பும் இசைக்கலைஞர்கள் நடனம் மற்றும் சண்டைப் பயிற்சிக் கலைஞர்களின் விண்ணப்பங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கோரப்பட்டுள்ளன.

இத்துறையில் ஆர்வமுள்ள இருபாலரும் முழு விபரமடங்கிய விண்ணப்பத்தை கடித மேலுறையின் இடதுபக்க மேல் மூலையில் 'தமிழ்ப பிரிவு - கலைக் குழு' என எழுதி இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம், த.பெ.இல-88, கொழும்பு என்ற விலாசத்துக்கு 15.01.2005 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# படை நடவழக்கைகளுக்காக 54 ட்ரக்ரர்கள் இறக்குமதி!

## இராணுவத்தளபதி தெரிவிப்பு



(கொழும்பு)

வடபகுதியில் படையினரின் நடவடிக்கைகளுக்கென 54 ட்ரக்ரர்களை இறக்குமதி செய்யவுள்ளதாக இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்த கொட்டேகொட தெரிவித்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை தியத்தலாவ இராணுவ பயிற்சிமுகாமில் கடெற், விமானப்படை மற்றும் விமானப்படை பெண்களுக்கான பயிற்சி நிறைவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

படை நடவடிக்கை இடம்பெறும் பகுதிக்கு இறக்குமதி செய்யப்படும் ட்ராக்ரர்கள் முன்னுரிமை அடிப்படையில் உயர் அதிகாரிகள் பயன்படுத்தும் கார்களுக்குப் பதிலாக வழங்கப்படும். இந்த ட்ரக்ரர்கள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படவுள்ளன.

உயர் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கார் வசதிகள் விலக்கிக்கொள்ளப்படவுள்ளன. இராணுவத்துக்கென 40 ஆயிரம் ரூபாவுக்கு ஒவ்வொரு வாகனமும் வாடகைக்கு பெறப்பட்டுள்ளன. இவற்றில் 50 வாகனங்கள் மீளப்பெறப்பட்டு கடற்படையினரிடமும், வர்த்தகத்துறையினரிடமும் திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இராணுவத்திலிருந்து 40 ஆயிரம் பேர் தப்பியோடியுள்ளனர். இவர்களில் சிலரே ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளுடன் தப்பிச்சென்றுள்ளனர்.

இவ்வாறு தப்பிச்சென்றவர்களை போர்க்குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றில் ஆஜராக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தப்பியோடிய படையினரில் சிலரை பாதாள உலகக் குழுவினர் வாடகைக்கு அமர்த்தியுள்ளனர். இவர்களில் குறிபார்த்து சுடுபவர்களும் உள்ளனர்.

பயிற்சியை முடித்து வெளியேறும் 49 கடெற் அதிகாரிகள், 654 விமானப்படையினர் இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் தாய்நாட்டைப் பாதுகாக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு இளைஞன் அல்லது யுவதிக்கும் இது ஒரு உயர்ந்தபட்ச கடமையாகும்.

அத்துடன், விமானப்படையில் தமது பிள்ளைகள் இணைவதற்கு அனுமதி வழங்கிய அவர்களின் பெற்றோருக்கும் அவர் நன்றி தெரிவித்தார். இந்த நிகழ்வில் விமானப் படைத்தளபதி எயார் மார்ஷல் டொனால்ட் பெரேராவும் உரையாற்றினார்.

# இலங்கை - இந்திய கூட்டுப் பயிற்சி விடுதலைப் புலிகளுக்கு எதிரான சதி

## திருமலை தமிழ்மக்கள் பேரவை குற்றச்சாட்டு

இலங்கை - இந்திய கடற்படையினரின் கூட்டுப்பயிற்சி - தமிழீழ விடுதலைப் போரட்டத்துக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும், சமாதானத்துக்கும் எதிரான மிகப்பெரிய சதி முயற்சியாகும்.

இவ்வாறு திருக்கோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இலங்கை கடற்படையினரும் - இந்திய கடற்படையினரும் கூட்டாக பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இந் நடவடிக்கை தமிழ் மக்களுக்கும், தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்துக்கும் எதிரானதொரு செயற்பாடாகும்.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் பலாத்காரமாக நுழையும்போது அதனை தடுத்து நிறுத்தாமல் இருப்பதும், உள்ளே விட்டுவிட்டு கண்டும் காணாதது போல் இருந்துவிட்டு தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மீனவர்களையும் தமிழீழத்திலுள்ள தமிழ் மீனவர்களையும் மோத வைக்கின்ற செயற்பாட்டில் இந்த இரண்டு கடற்படையினரும் செயற்படுவதை நாங்கள் அறிவோம்.

தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்த இந்திய அரசு இன்று தமிழீழ மக்களுக்கெதிராகவே செயற்படுகின்றது என்பதை நாம் மிகவும் வேதனையுடன் நோக்குகின்றோம்.

தமிழீழ மண்ணில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்ட போதும், குண்டுகள் வீசப்பட்ட போதும் தமிழ் மக்களின் வள்ளங்கள், மீன்பிடிப்படகுகள், கடற்படையினரால் தாக்கப்பட்ட போதும் மூச்சுக்கூட விடாத இந்திய அரசாங்கம் இன்று இலங்கை கடற்படையினருடன் கூட்டுச்சேர்ந்து கூத்தடிப்பதனை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இந்திய அரசாங்கம் ஈழத் தமிழ் மக்களினது உரிமைகளைப் பெற்றுக்கொடுப்பதற்குரிய தார்மீகப் பொறுப்பு மிக்கதாகும். இந்திய அரசாங்கம் தமிழ் மக்களுக்கும் அவர்களது விடுதலைப் போராட்டத்துக்கும் உதவி செய்யாது விட்டாலும், இடைஞ்சல் செய்ய வேண்டாமென கேட்டுக்கொள்கின்றோம்.

கேணல் கிட்டு உட்பட பன்னிரண்டு போராளிகள் இந்திய கடற்படையினரின் வஞ்சக வலை விரிப்பினாலேயே குமுறும் கடற்பரப்பில் தீயாகிச் சங்கமித்தனர். இதனை இன்றும் நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

இந்திய அரசாங்கத்திற்கு தமிழ் மக்கள்தான் உண்மையான நண்பர்களாக இருப்பார்களே தவிர, இலங்கை அல்ல என்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்து செயற்படுமென வேண்டுவதுடன் -

காலஞ்சென்ற முன்னாள் இந்தியப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி தமிழீழ மக்கள் மீது வைத்திருந்த பற்றையும், பாசத்தையும் நினைவில் நிறுத்தி அரசாங்கத்துக்கு இராணுவ ரீதியாக உதவுகின்ற அத்தனை செயற்பாடுகளையும் உடன் நிறுத்த வேண்டுமென வேண்டுகின்றோம்.

இந்திய அரசு இவ்வாறான கடற்படை கூட்டுப் பயிற்சி மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்கும் இடையேயுள்ள இராணுவச் சமநிலையை சீர்குலைத்து சமாதான ஒப்பந்தத்தை நிச்சயமாக சிதறடிக்குமென எச்சரிக்கிறோம்.

இந்தப் பழியை இந்திய அரசாங்கம் சுமக்கக் கூடாதென தமிழீழ மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எஸ்.பியை எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

சட்டவிரோதமாக சொத்துக்களைச் சேர்த்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் தொடரப்பட்ட மனுவின் மீதான விசாரணைகளை மேற்கொள்ள முன்னாள அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவை எதிர்வரும் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக்குழு செய்திருந்த மனுவை பரிசீலனை செய்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதிவான் சிசிர டி ஆப்ரே இந்த உத்தரவைப் பிறப்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திஸநாயக்கவின் சொத்துக்கள் தொடர்பாக லஞ்ச விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

தனது வருமானத்துக்கும் அதிகமாக எஸ்.பி 1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி முதல், 2001 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 30 ஆம் திகதிவரை 2 கோடி 90 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்களை சேர்த்துள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனப்பிரச்சினையில் தலையிட நோர்வேக்கு அதிகாரமில்லையாம்

## போல் ஹரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை - ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றல்ல என்று சர்வதேச பாதுகாப்பு ஆய்வாளர் போல் ஹரிஸ தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இடைக்கால நிர்வாக யோசனைக்கெதிராக இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதானத்துக்காக உலக சமாதான முன்னணி ஏற்பாடு செய்திருந்த இந்தக் கருத்தரங்கில், 'இலங்கையில் ஜனநாயகமும் சமாதானமும்' எனும் தலைப்பில் உரையாற்றிய போல் ஹரிஸ்-

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமானது, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இலங்கையில் இடம் பெற்றுவரும் இனப்பிரச்சினையில் தலையிடுவதற்கு நோர்வே அரசாங்கத்துக்கு எந்தவித உரிமையும் கிடையாது எனத் தெரிவித்தார்.

# வாகனக்கடத்தலில் ஈடுபட்ட எட்டு பேர் விளக்கமறியலில்

(வவுனியா)

வவுனியாவில் வாகன கடத்தல்களுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் 8 பேர் பொலிஸாரால் கடந்த சனிக்கிழமை வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இதனையடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இவர்கள் 7 பேர் தமிழர்களாவர். இவர்களால் ஏமாற்றப்பட்டதாகக் கூறப்படுபவர்கள் வழங்கிய தகவலை அடுத்தே இந்த 8 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, இவர்களிடமிருந்து இரண்டு மினிபஸ்களும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன. (01)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட்

# இந்தியாவுக்கு இனிங்ஸ் வெற்றி!



சிட்டகொங்கில் நடைபெற்றுவந்த பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் - இனிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்களால் வெற்றிபெற்ற இந்திய அணி தொடரை முழுமையாகக் கைப்பற்றியது.

இந்திய அணி முதல் இனிங்ஸில் 540 ஓட்டங்கள் குவித்தது. ராவிட் 160 ஓட்டங்களும், கௌதம் கம்பீர் 139 ஓட்டங்களும், கங்கூலி 88 ஓட்டங்களும் எடுத்தனர். ரபீக் 4 விக்கெட்டும், மொர்ராஸா 3 விக்கெட்டும், நஜ்முல் 2 விக்கெட்டும் எடுத்தனர்.



பின்னர் முதல் இனிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் 333 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தது. இதனால் பங்களாதேஷ் அணி 'பலோ ஒன்' ஆனது. அஸ்ரப் சிறப்பாக ஆடி 158 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார். கும்ளே 4 விக்கெட்டும், பதான், சகீர்கான் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் எடுத்தனர்.

2 ஆவது இனிங்ஸை தொடர்ந்து ஆடிய பங்களாதேஷ் அணி இர்பான்பதானின் அபாரமான பந்துவீச்சால் 3 ஆவது நாள் ஆட்டநேர முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 118 ஓட்டங்கள் எடுத்து இனிங்ஸ் தோல்வியின் விளிம்பில் இருந்தது.

நேற்று நடைபெற்ற 4 ஆவது நாள் ஆட்டத்தில் ஹர்பஜன்சிங் முதல் ஓவரை வீசினார். ரல்ஹா ஜுபைர் அந்த ஓவரை எதிர்கொண்டார். 2 ஆவது பந்தில் அவர் சிக்சர் அடித்தார். 4 ஆவது பந்தில் ஜுபைர் ஆட்டமிழந்தார்.



பங்களாதேஷ் 2 ஆவது இனிங்ஸில் 26.4 ஓவரில் 124 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இந்தியா இனிங்ஸ் மற்றும் 83 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. அந்த அணியில் ஜுபைர் அதிகபட்சமாக 31 ஓட்டங்கள் எடுத்தார். இந்தியத் தரப்பில் இர்பான் பதான் 5 விக்கெட்டுக்களும், கும்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களும், டெண்டுல்கர் 1 விக்கெட்டும் வீழ்த்தினர்.

பங்களாதேஷ் வீரர் முகமது அஸ்ரப் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். இர்பான் பதான் தொடர் நாயகன் விருதைப் பெற்றார்.

இந்த வெற்றி மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது. டாக்காவில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா இனிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இதேவேளை, இந்தியா - பங்களாதேஷ் அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டித் தொடரின் முதல் போட்டி நாளை மறுதினம் சிட்டகொங்கில் நடைபெறும். 2 ஆவது போட்டி 26 ஆம் திகதியும், கடைசிப் போட்டி 27 ஆம் திகதியும் டாக்காவில் பகல் - இரவு ஆட்டமாக நடைபெறும்.

## 500 விக்கெட்டுக்களை வீழ்த்துவதே எனது இலக்கு!

### அவுஸ்ரேலிய வீரர் மக்ரா

(சிட்னி)

'டெஸ்ட் கிரிக்கெட்டில் 500 விக்கெட் வீழ்த்துவதே அடுத்த இலக்கு. இப்போதைக்கு ஓய்வுபெறும் உத்தேசம் எதுவும் இல்லை. 2007 உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடக் காத்திருக்கிறேன்' என அவுஸ்ரேலியாவின் வேகப்பந்து வீச்சாளர் மக்ரா தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராகத் துல்லிய வேகப்பந்து வீச்சை வெளிப்படுத்திய இவர் அணிக்கு அபார வெற்றியைத் தேடிக்கொடுத்தார். 34 வயதான இவர், தற்போது 472 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். 24 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட் கைப்பற்றிய இவர், சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்திய இரண்டாவது அவுஸ்ரேலிய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

தனது செயற்பாடு குறித்து மக்ரா கூறுகையில் - 'முதல் ஓவரை வீசும்போது மிகவும் சோர்வாக இருந்தேன். ஆனாலும் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து விழ புதுத் தெம்பு பெற்றேன். இப்போதைக்கு ஓய்வு பெறும் உத்தேசம் இல்லை. டெஸ்டில் 500 விக்கெட் வீழ்த்தியுள்ள வோல்ஸ், வோர்ன், முரளிதரன் ஆகியோர் வரிசையில் இடம்பெற முடியும் என்று நம்புகிறேன். இதுவே எனது அடுத்த இலக்கு. 2007 உலகக் கிண்ணப் போட்டி வரை விளையாட விரும்புகிறேன்' எனத் தெரிவித்தார்.

## விளையாட்டு

### புனே சர்வதேச மரதன்

# ஆண், பெண் பிரிவுகளில் கென்யாவுக்கே தங்கம்



புனேயில் நடந்த சர்வதேச மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவிலும் பெண்கள் பிரிவிலும் கென்ய வீர, வீராங்கனைகள் முதலிடத்தைத் தட்டிச் சென்றனர்.

மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புனேயில் 19 ஆவது சர்வதேச மரதன் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 25 நாடுகளைச் சேர்ந்த முன்னணி வீர, வீராங்கனைகள் உட்பட சுமார் 30 ஆயிரம் பேர் பங்கேற்றனர். ஆண்களுக்கான 42.195 கி.மீ. தூரமுள்ள 'முழு' மரதன் போட்டியை இந்தியாவின் பிரபல ரெனிஸ் வீரர் மகேஷ் பூபதி கொடி அசைத்து தொடக்கி வைத்தார்.

பல்வேறு வீரர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதில் கென்யாவின் டக்லோஸ் வான்கி 2 மணிநேரம் 21 நிமிடம் 22 வினாடிகளில் கடந்து தங்கம் வென்றார்.

இவரது சகநாட்டு வீரரான மசனி வைய்ரகி (2 மணி நேரம் 22.06 நிமிடம்) வெள்ளியும், தென்னாபிரிக்காவின் விளாடமிர் கோடவ் (2 மணிநேரம் 22.56 நிமிடம்) வெண்கலமும் கைப்பற்றினர். இந்தியாவின் சார்பில் பங்கேற்ற ஹவில்தர் சிவ்தன் சிங் 2 மணிநேரம் 23.32 நிமிடங்களில் கடந்து ஐந்தாம் இடத்தைப் பிடித்தார்.

பெண்களுக்கான 21 கி.மீ. தூரம் கொண்ட 'பாதி' மரதன் போட்டியிலும் கென்ய வீராங்கனையே தங்கம் வென்றார். ஜனி முலா 1 மணி நேரம் 11.59 நிமிடங்களில் போட்டித் தூரத்தை கடந்து முதல் இடத்தைப பிடித்தார். ரஷ்யாவின் டிமாபிவா ஜரினா (1 மணி நேரம் 12.05 நிமிடம்) வெள்ளியும், கிர்கிஸ்தானின் போரிசோவா தாதியானா (1 மணி நேரம் 12.36 நிமிடம்) வெண்கலமும் வென்றனர்.

இந்தியாவின் சார்பில் பங்கேற்ற மாதுரி கர்னுல் 1 மணி 14.45 நிமிடங்களில் கடந்து நான்காவது இடம் பெற்றார். ஆண்கள் பிரிவில் முதல் இடம் வென்றவர்க்கு ரூ. 2.5 லட்சம் இந்திய ரூபாவும், பெண்கள் பிரிவில் 1 லட்சம் இந்திய ரூபாவும் வழங்கப்பட்டன.

இது தவிர 3.5 கி.மீ. தூரம் கொண்ட பிரபலங்களுக்கான ஓட்டமும், ஊனமுற்றோருக்கான 'வீல்-சேர்' ஓட்டப்போட்டியும் நடத்தப்பட்டன.


## நியூஸிலாந்து அணியில் வேகப்பந்துவீச்சாளர் ரபி!

இலங்கை அணிக்கெதிராக நடக்கவிருக்கும் போட்டியில், நியூஸிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ட்ரல் ரபி இடம்பிடித்துள்ளார்.

அத்தப்பத்து தலைமையிலான இலங்கை கிரிக்கெட் அணி நியூஸிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் மோதவுள்ளது. இந்தப் போட்டிக்கான நியூஸிலாந்து அணியில் வேகப்பந்து வீச்சாளர் ட்ரல் ரபி இடம்பிடித்துள்ளார்.

காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பங்களாதேஷ் மற்றும் அவுஸ்ரேலிய சுற்றுப் பயணங்களில் ரபி இடம்பிடிக்கவில்லை. தற்போது முழுகுணம் அடைந்துவிட்டதால் அவர் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# முதல் டெஸ்ட் வெற்றியைப் பெற்ற முன்னாள் இந்திய கப்டன் மறைவு!




முன்னாள் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டன் விஜய் ஹசாரே (89) வடோதராவில் கடந்த சனிக்கிழமை காலமானார்.

புற்றுநோய் காரணமாக கடந்தசில தினங்களாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஹசாரே, சனிக்கிழமை பிற்பகல் உயிரிழந்தாரென அவரது மகன் ரஞ்சித் ஹசாரே தெரிவித்தார்.

1946 இல் இங்கிலாந்து சென்ற இந்திய அணியில் முதன் முதலாக இடம்பிடித்த ஹசாரேக்கு அப்போது வயது 31.

1946 முதல் 1953 வரையிலான காலகட்டங்களில் 30 டெஸ்ட்களில் விளையாடி, மொத்தம் 2192 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இவரது சராசரி 47.65.



வலதுகைத் துடுப்பாட்ட வீரரான ஹசாரே, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய நாடுகளுக்கு எதிராக தலா 2 முறையும், பாகிஸ்தானுக்கு எதிராக ஒரு முறையும் சதங்களை அடித்துள்ளார். அத்துடன் 20 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

1952 இல் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இவரது தலைமையிலான இந்தியக் குழு முதல் டெஸ்ட் வெற்றியைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

# தென்னாபிரிக்க அணிக்கு எதிராக இங்கிலாந்து 425 ஓட்டங்கள் குவிப்பு



தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எலிசபெத் நகரில் நடைபெற்று வருகிறது. தென்னாபிரிக்க அணி முதல் இனிங்ஸில் 337 ஓட்டங்கள் குவித்தது. பதிலுக்கு இங்கிலாந்து அணி இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 227 ஓட்டங்களுடன் வலுவான நிலையில் இருந்தது.

ஸ்ரரஸ் 120, புச்சர் 24 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இங்கிலாந்து அணி, மூன்று முக்கிய விக்கெட்டுக்களை இழந்தது. ஸ்ரரஸ் 126 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கப்டன் மைக்கல் வோகன் 1 சிக்சர், 1 பவுண்டரியுடன் 10 ஓட்டங்களில் ஹோல் பந்தில் ஆட்டமிழந்தார். இவரைத் தொடர்ந்து தோர்ப் 4 ஓட்டங்களில் வெளியேறினார். இதன் மூலம் இங்கிலாந்து அணி 267 ஓட்டங்களில் 4 விக்கெட்டுக்களை இழந்தது. ஒருமுனையில் நிதானமாக ஆடிய புச்சர் அரைச்சதம் அடித்தார்.


இவர், பிளின்ரொப்புடன் ஜோடி சேர்ந்து அணியைச் சரிவிலிருந்து மீட்டார். இந்த ஜோடி 79 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் என்ரினியின் வேகத்தில் இங்கிலாந்து அணி மீண்டும் தடுமாறியது. புச்சர் 79, பிளின்ரொப் 35, ஜெரைன்ட் ஜோன்ஸ் 2 ஓட்டங்களில் என்ரினி பந்தில் ஆட்டமிழந்தனர்.



ஹொகாட் 'டக்'கில் ஆட்டமிழந்தார்.

உணவு இடைவேளைக்குப் பின்னர் 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்து இங்கிலாந்து அணி சற்று நின்று பிடித்து ஆடியது.

அணியின் ஸ்கோர் 394 ஐத் தொட்ட போது கைல்ஸ் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன் பின்னர் ஹர்மிசன் - ஜோன்ஸ் ஜோடி 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தது.



கடைசி விக்கெட்டாக ஜோன்ஸ் 24 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். ஹர்மிசன் 15 ஓட்டங்களைப் பெற்றநிலையில் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதன்மூலம் இங்கிலாந்து அணி 425 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 57 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்த தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களில் என்ரினி 3 விக்கெட்டுக்களையும், பொலக், ஸ்ரெய்ன், ஹோல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், ஸ்மித் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி 64 ஓட்டங்களை எடுப்பதற்குள் இரண்டு விக்கெட்டுக்களை இழந்தது.

டி.வில்லியர்ஸ் 14 ஓட்டங்களுடனும் ருடொல்ப் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். நேற்றுமுன்தினம் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது - தென்னாபிரிக்க அணி 2 விக்கெட் இழப்புக்கு 99 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்பரப்பில் நுழைந்த இந்திய மீனவர்கள் விரட்டியடிப்பு

இலங்கை கடல் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடிக்க முயன்ற தமிழக மீனவர்களின் படகுகளை இந்திய - இலங்கை கடற்படையினர் இந்திய கடல் எல்லையிலேயே தடுத்து நிறுத்தினர்.

இலங்கை கடற்படையினரின் தொடர்தாக்குதல்களால் ஒரு வாரம போராட்டத்தில் ஈடுபட்ட இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முன்தினம் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். இரவில் மட்டும் மீன்பிடித்துத் திரும்ப, மீனவர் சங்கம் அனுமதி வழங்கியது. மாலை 4 மணிக்கு மேல் கடலுக்குச் சென்ற மீனவர்கள் பலர் இரவு 8 மணிக்குப் பின்னர், இலங்கைக் கடற்பகுதிக்குள் நுழைய முயன்றனர்.

இந்திய கடல் எல்லையில் கூட்டு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இந்திய - இலங்கை கடற்படையினர் அவர்களை எல்லையிலேயே தடுத்து நிறுத்தித் திருப்பியனுப்பினர். அதையும் மீறிச் சென்ற மீனவர்களிடமிருந்த அடையாள அட்டைகளை இலங்கைக் கடற்படையினர் பறித்துக் கொண்டு விரட்டியடித்தனர். இதனால் படகில் சென்ற மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள்ளேயே மீன்பிடித்துவிட்டு, நேற்று முன்தினம் அதிகாலை இராமேஸ்வரத்தைச் சென்றடைந்தனர். கடற்படையினர் நடுக்கடலில் தடுத்து நிறுத்தியதால், மிகவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கரைதிரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

## மாறிவரும் சிந்தனைகளுக்கு ஏற்ப கூட்டுறவை நவீனப்படுத்த வேண்டும்

### சொலமன் சிறில் தெரிவிப்பு

மாறிவரும் சிந்தனைக்கு ஏற்ப கூட்டுறவை நவீனப்படுத்தவேண்டிய தேவை இன்று எம் முன் உள்ளது. இதன் காரணத்தினாலே எம்மக்களின் வேண்டுகைக்கு ஏற்ப, இன்று யாழ்ப்பாண நகரின் கேந்திரஸ்தானத்தில் கூட்டுறவு நகர் என்ற பல்துறை சேவை அடங்கிய இந்த நிறுவனத்தை ஆரம்பித்துள்ளோம் என சொலமன் சிறில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கூட்டுறவின் இலட்சியமானது, மக்களின் சமூக பொருளாதார கல்வி கலாசார மேம்பாட்டுக்காக உழைப்பதே. இவற்றில் நாம் அன்றும் இன்றும் உறுதியாகவே உள்ளோம். இருந்தும் போராலும், பொருண்மிய தளபாடங்களாலும் அழிவுகள், அனர்த்தங்களாலும், இடர்பாடுகள் இடம் பெயர்வுகளாலும், பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு காலத்தின் தேவை அறிந்து செயற்பட்டவை கூட்டுறவு நிறுவனங்களே. இதனால் தான் மக்கள் மத்தியில் பேசும் பொருளாகக் கூட்டுறவு நிமிர்ந்து நிற்கிறது.

இது மக்கள் நிறுவனம். மக்களின் சொத்து. இதை முத்தாக்குவது மக்கள் கரங்களிலேயே தங்கியுள்ளது. எமது சேவையால் கிடைக்கப் பெறுகின்ற சிறிய இலாபங்கள் கூட மக்களிடையே பகிரப்படுகின்றன. மக்களிடையே பகிரப்படுகிறதென்றால் எம் தேசத்தின் தேசிய தேவைகளுக்கும், சேவைகளுக்கும் மூலதனமாகிறது.

எனவே உங்களது நாளாந்த தேவைகளையும், சேவைகளையும் கூட்டுறவின் ஊடாகப் பெற்றுக்கொள்கின்ற ஒவ்வொரு வேளையும் தேச நலனுக்கும் பங்களிக்கின்றீர்கள். இந்த வகையில் நுகர்வோர் அங்கத் தவர்கள் துறை சார்ந்த பெரியோர்களது ஆதரவையும், ஆலோசனைகளையும் நாம் என்றும் வேண்டி நிற்கின்றோம். இதுதான் எங்களின் நிறைவும் வளர்ச்சியுமாகும் என மேலும் தெரிவித்தார்.

## குருநகர் ஐஸ் தொழிற்சாலையை இயக்க படையினர் அனுமதி மறுப்பதால் ஐயாயிரம் மீனவர்கள் பாதிப்பு!

### சமாசத் தலைவர் தவரட்ணம் தெரிவிப்பு

யாழ்.குருநகர் பகுதியில் இயங்கிவந்த ஐஸ் தொழிற்சாலையை மீள இயக்குவதற்குப் படையினர் தொடர்ந்து அனுமதி மறுத்து வருவதால், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 5 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனரென, யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரட்ணம் தெரிவித்தார்.

குருநகர்ப்பகுதி அதிஉயர் பாதுகாப்பு வலயமாக இருப்பதால், இந்த ஐஸ் தொழிற்சாலையை மீள இயங்கவைப்பது அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பதால், இந்த ஐஸ் தொழிற்சாலையை இயங்க வைப்பதற்கு அனுமதிக்க முடியாதென படையினர் தெரிவித்தனர்.

இந்த ஐஸ் தொழிற்சாலை இயங்காததால், 5 ஆயிரம் கடற்றொழிலாளர் பாதிக்கப்படடதுடன், சர்வதேச தொண்டர் நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட 60 மில்லியன் ரூபா நிதி கிடைக்காமற் போய்விட்டதாகவும் தெரிவித்தார்.

இதனால் கடற்தொழில் அபிவிருத்தியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதென அவர் மேலும் தெரிவித்தார். (17)

## சிங்களப் பேரினவாத அரசும் - ஜனாதிபதியும் எமது உரிமைகளை வழங்கத் தயாராக இல்லை

### நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்

(யாழ்ப்பாணம்)

எமது தேசியம் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுதது, ஒரு ஒற்றுமை உணர்வுடன் ஒன்றுபட்ட இனமாக ஒரே குரலில் எங்களது உரிமைகளைக் கோருகின்ற இனமாக பரிணமித்திருக்கின்றோம். தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் உரிமைகளுக்காகப் போராடிய் எங்கள் தலைவர்களை சிங்களப் பேரினவாதத் தலைவர்கள் ஏமாற்றியதுடன் நின்றுவிடாது, தொடர்ச்சியாக எமது இனத்தை எவ்வாறு அழிக்க முடியுமோ அதற்கான வழிகளைக் கையாண்டது என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" என்ற நாடக ஆற்றுகையில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

எமது இனத்தை, தேசியத்தை, சமத்துவத்தை இல்லாதொழிக்க முற்பட்ட போதே, எமது தேசியத் தலைவரின் வழியில் ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றது. இன்று இராணுவ சமநிலை பெற்ற ஒரு தனித் தேசிய இனமாக நாம் மிளிர்கின்றோம். தமிழ் மக்களாகிய நீங்கள் தேசத்தின் ஒற்றுமையை வலியுறுத்தியதன் விளைவாக, இராணுவப் பலத்துடன் அரசியல் பலத்தையும் பெற்று, எமது உரிமைகளைக் கோருகின்ற இனமாக நாம் உயர்ந்துள்ளோம்.

சிங்களப் பேரினவாத அரசு எங்களது உரிமைகளை மதித்து, எமக்கான தீர்வை வழங்குவதற்குத் தயாராக இல்லை. கடந்த மூன்று வருடங்களாக விடுதலைப்புலிகள் சமாதானத்தை விரும்பி யுத்த நிறுத்தத்தை மேற்கொண்ட போதிலும், சிங்களப் பேரினவாதம் அதைத் தட்டிக் கழித்து வருகிறது. தமிழ் மக்களுக்கு தன்னாட்சி உரிமையை வழங்குவதற்கு முட்டுக்கட்டையாக சந்திரிகா அமைச்சில் ஜே.வி.பியினர் உள்ளனர்.

சந்திரிகா தனது அதிகாரத்தையும், பதவிக்காலத்தையும் எப்படிப் பிரயோகிக்கலாம். தக்க வைக்கலாம் என்பதிலேயே குறியாக இருக்கின்றார். இவ்வாறான நிகழ்வுகளின் ஊடாக நாங்களே எங்களைப் பராமரிக்கின்ற நிலையை அடையவேண்டும். அதன் விளைவாக எம்மை நாமே ஆளமுடியும் என யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் தெரிவித்தார். (91)

## கசிப்புவிற்ற குடும்பப் பெண்ணுக்கு 26 மாதகால சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்துவந்த குடும்பப் பெண்ணொருவருக்கு யாழ்.நீதிமன்றம் 26 மாதம் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. மேலும் ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

கடந்த 12 ஆம் திகதி இரவு கோண்டாவில் கிழக்கு சென் செபஸ்தியார் வீதியைச் சேர்ந்த [illegible]வரின் வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்துகொண்டிருந்த உரிமையாளர் - கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இவர்களைக் கடந்த திங்கட்கிழமை யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது, 2 வருடமும், 2 மாதமும் கடூழியச் சிறைத் தண்டனை விதித்த நீதிவான், இந்த நபர் இதற்கு முன்னரும் இந்தச் செயலில் ஈடுபட்டு விடுவிக்கப்பட்டவர் எனத்தெரிவித்தார். மற்றைய நபருக்கு 40 ஆயிரம் ரூபா குற்றப்பணமும், 20 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறு யாழ்.நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார். (82)

## மயானம் புனரமைக்க ரவிராஜ் எம்.பி. உதவி

சங்கானை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தால் புனரமைக்கப்பட்டு, நிதிப்பற்றாககுறை காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ள சங்கானை கரைச்சி மயானப் புனரமைப்புக்கு 2004 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவு ஒதுக்கீட்டின் கீழ் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை ஊடாக வழங்கப்பட்ட இந்த நிதியின் மூலம், ஓரளவு கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்யப் போவதாக கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (48)

## புதிய பாடத்திட்டம் குறித்து செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டுக்குரிய தரம் 7 இல் சமூகக்கல்வி பாடத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புவியியல், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பான செயலமர்வு - எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் காலை 8 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட தரம் 7 இல் மேற படி பாடங்களைக் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களை தவறாது இந்தப் பயிற்சியில் பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

சமூகக் கல்விப் பாடத்துக்குப் பதிலாக புவியியல், வரலாறு, குடியியல் ஆகிய பாடங்கள் 2005 முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

## வீடமைப்புக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவி

(வடமராட்சி)

வடமராட்சிப் பகுதியில் இடம்பெயர்ந்து, உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும் வசித்துவரும் மக்களுக்கும், சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத மக்களுக்கும் வீடுகள் அமைத்துக்கொடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

அந்த வகையில் வடமராட்சியில் தற்காலிகமாக வாழ்ந்து வரும் மக்களுக்கு தற்போது 125 வீடுகளை அமைத்துக் கொடுக்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது. (14)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ப.சாறுஜன்
முகவரி : மல்லாகம் கிழக்கு, மல்லாகம்.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்






யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி லியோ கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட நீரிழிவு நோயாளருக்கான மருத்துவ பரிசோதனையில் - மருத்துவ பரிசோதனையை மேற்கொண்ட டொக்டர் அப்துல்காதரையும், ஆசிரியர் மற்றும் நோயாளியை முதலாவது படத்திலும், வீதி விபத்துக்கள் தொடர்பான கருத்தரங்கில் மருத்துவபீட மாணவன் றோகான் கருத்துரை நிகழ்த்துவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (90)

## பகுப்பாய்வு திணைக்கள ஆட்சேர்ப்புக்கு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம்

இலங்கை அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்திலுள்ள இலங்கை விஞ்ஞான சேவையின் வகுப்பு 2, தரம் 2 இலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு, ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 2004 நடத்துவதற்கு தகைமையானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றில், இரசாயனவியல் பற்றிய முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்ற, இருபத்திரண்டு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் இடைப்பட்டவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் ஜனவரி 13 ஆம் திகதிக்கு முன்பாக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மும்மொழிகளிலும் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிகத் தகவல்களையும் இந்த மாதம் 17 ஆம் திகதி வெளியாகிய அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும். (31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நஞ்சுத்தவளையை அழிக்க பாம்புகள்



அவுஸ்ரேலியாவில் 1935 ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட ஒருவகை நஞ்சுத் தவளையின் பெருக்கம் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது. தடித்தவளை எனப்படும் இந்த நஞ்சுத் தவளையின் உடலில் காணப்படும் நஞ்சு, பாம்பின் நஞ்சுக்குச் சமமானதாகும்.


இந்தத் தவளையைத் தெரியாத்தனமாக உண்ணும் பாம்புகள், உடும்பு போன்ற ஊனுண்ணிகள் உடனடியாகவே நஞ்சேறி உயிரிழக்கின்றன.

பயிரப்பீடைக் கட்டுப்பாட்டுக்காக 1935 ஆம் ஆண்டில் அவுஸ்ரேலியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தத் தவளையினத்தால் தற்போது அவுஸ்ரேலியாவில் வேறுசில உயிரினங்கள் அழிவுக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. குயின்ஸ்லாந்தில் பெருகிவரும் இந்தத் தவளைகள் – தற்போது அவுஸ்ரேலியாவின் வடக்கு பகுதியிலும் பெருகிவருவதாக அறியப்பட்டுள்ளது.

தற்போது இவற்றை அழிக்கவென இரு நச்சுப் பாம்புகளின் இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இயற்கைச் சமநிலையைப் பேண, இயற்கை எடுத்த அதிரடி நடவடிக்கை தான் இது.

# வீழ்ச்சியில் மொபைல் போன்

அதிகரித்துவருகின்ற மொபைல் தொலைபேசிக் கட்டணங்கள் பாவனையாளர்களிடையே விசனத்தை ஏற்படுத்துகிறது. இதன் காரணமாக மொபைல் தொலைபேசிப் பாவனையில் ஒரு வீதமான விழுக்காடு ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. ஆனால் தொலைபேசி நிறுவனங்கள் ஏட்டிக்குப்போட்டியாக தங்களுடைய கட்டணங்களை அதிகரித்தும், சில சலுகைகளைக் கொடுத் தும் இருக்கின்றன.



வொடபோன், ரிமொபைல் மற்றும் ஒரேஞ் ஆகிய தொலைபேசிகள் தங்களுடைய தொலைபேசிக் கட்டணங்களை மீள் பரிசோதனை செய்யவேண்டிய தேவையிருப்பதாக ஒத்துக்கொள்கின்றன. வாடிக்கையாளர்கள் மட்டத்தில் கைத் தொலைபேசிக்கட்டணங்களை 30 வீதமாவது குறைக்கவேண்டும் என, ஒரு பிரேரணை விடப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக இந்தக் கட்டணக்குறைப்பு பேச்சளவிலேயே இருக்கின்ற காரணத்தால், ஒரு கட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் கைத் தொலைபேசிப் பாவனையும் குறைவடையக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். ஆனாலும் பிரான்ஸ், அயர்லாந்து ஆகிய நாடுகளைவிட, அமெரிக்கா மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளில் கைத்தொலைபேசிப் பாவனை தற்போது அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் , அதற்குக் காரணம் அங்கே வழங்கப்படுகின்ற சிறந்த சலுகைகள்தான் எனக் கருதப்படுகிறது.

# அழியும் குரங்குகள்



ஐரோப்பிய நாடுகளில் குரங்குகளைப் பலதரப்பட்ட தேவைகளுக்குப் பயன்படுத்துவதில் , குறிப்பாக விஞ்ஞான ஆராய்ச்சிக்கும், மருத்துவ ஆராய்ச்சிக்கும் பயன்படுத்துவது தற்போது அதிகரித்துள்ளது. குரங்குகள் பொதுவாக மனிதர்களைப் போல் ஒத்த இயல்புகளைக் கொண்டதாகக் காணப்படுவதால், அவை கூடுதலாக ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டு ஒக்ரோபருக்கும் 2003 மார்ச் மாதத்துக்கும் இடையில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி, 154 தடவைகள் – குரங்குகள் ஏதோ ஓர் வகையான ஆராய்ச் சிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் மனிதக் குரங்குகளே கூடுதலான ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகக் குரங்குகளின் எண்ணிக்கை தற்போது சடுதியாகக் குறைந்துவருகிறது. குரங்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரையில், இனப்பெருக்கத்தில் மற்றைய மிருகங்களைக் காட்டிலும் அதிகமாயுள்ளது. இதன் காரணமாக அவற்றின் எண்ணிக்கையில் பெரிய பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை எனக் கூறப்படுகிறது. கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, குரங்குகள் மருத்துவத்தைப் பொறுத்தளவில் மனிதர்களிலிருந்து வேறுவபடுவதாகக் கூறப்படுகிறது.

# விடியோ விளையாட்டுக்கு கட்டுப்பாடு



விடியோ விளையாட்டுப் பெட்டிகளில் – இனிமேல் இந்த விளையாட்டு சிறுவர்களுக்கு உகந்ததா, இல்லையா என்பதை பொறிக்க வேண்டும் என்ற சட்டத்தைக் கொண்டு வருவது குறித்து, பிரிட்டனில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை விடியோ விளையாட்டுக்கள் – சிறுவர், பெரியவர்கள் என்ற வேறுபாடின்றி அனைவராலும் பயன்படுத்தப்பட்டுவந்தது. பெரியவர்களுக்கான விடியோ விளையாட்டுக்களில் காணப்படும் வன்முறை விளையாட்டுக்கள், சில சமயம் சிறுவர்களாலும் விளையாடப்பட்டது. இது அவர்களின் வன்முறை உணர்வுகளைத் தூண்டவே செய்தது.

2003 ஆம் ஆண்டில் பிரிட்டன் மக்கள் விடியோ விளையாட்டுக்களுக்காக 1152 மில்லியன் பவுண்ஸை செலவிட்டுள்ளனர். அண்மையில் இரு சிறுவர்கள் ஒருவரை ஒருவர் கத்திகளால் தாக்கிக்கொண்டதில், ஒரு சிறுவன் பலியானதைத் தொடர்ந்து, இந்தச்சட்டம் கொண்டுவரப்படவிருக்கிறதாம்.

# ஏவுகணை புஷ்வாணமானது!

அமெரிக்காவின் ஏவுகணை தடுப்பு வலைத்திட்டம் தோல்வியில் முடிவடைந்துள்ளது. அமெரிக்காவின் பனிபடர்ந்த அலஸ்கா மாநிலத்தில் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் இறுதியில், மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்ட சோதனை தோல்வியடைந்தது. தாக்கவேண்டிய ஏவுகணை செலுத்தப்பட்டு, சில மணிநேரத்தில் செயலிழந்துவிட்டது. ஆனால் அழிக்கப்படவேண்டிய மாதிரி ஏவுகணை, ஏவிய இடத்திலிருந்து வெற்றிகரமாகப் புறப்பட்டு, இலக்கில் வந்து வீழ்ந்ததாகக் கூறப்படுகிறது. இந்தத் திட்டத்துக்கென பென்டகன் வருடத்துக்கு 10 பில்லியன் டொலர்களை செலவிட்டுவந்தது. இதுவரை ஆரம்பகட்டமாக நடந்த எட்டு சோதனைப் பறப்புக்களில் ஐந்து சோதனைப் பறப்புக்களின் ஏவுகணைகள் சிறப்பாகச் செயற்பட்டு தாக்கி அழிக்கப்பட்டன என நாஸா கூறுகிறது.



# பனியுகத்தாக்கம் நீங்கவில்லை

உலக வெப்பநிலை அதிகரிப்பு பனித்துருவங்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக அனைவரும் கூறிவரும் நிலையில், துருவப் பகுதியில் நடைபெறும் பனிமலைகளின் நடமாட்டங்கள் குறித்து கவனிக்கத் தவறிவிடுகிறோம்.



பனியுகத்தின் தாக்கம் குறித்து, சமுத்திரங்களின் அடியிலிருந்து எடுக்கப்பட்ட தடயங்களிலிருந்து பனியுகத்தின் தாக்கம் – அந்தக் காலங்களில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை அறியக்கூடியதாக இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பனியுகத்தின் தாக்கத்திலிருந்து பூமி இன்னமும் முற்றாக விடுபட்டதாகக் கூறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரை விமர்சனம்

## அம்மா அப்பா செல்லம்

தாய் தந்தையரை உயர்ந்த இடத்துக்குக் கொண்டு செல்ல ஆசைப்படும் மகனின் கதைதான் இது.

பெரியார்தாசன் – சபிதா ஆனந் ஆகியோரது மகன் பாலா. படிப்பில் கெட்டிக்காரன். அவர் கல்லூரியில் சாயாசிங்குடன் காதல் கொள்கிறார். ஆனால், தன்னுடைய வறுமையால் காதலை வெளியிடமுடியாது தவிக்கிறார். ஆனால் சாயாசிங் தன்னுடைய காதலை வெளியிடுகிறார். ஆனால் தனது தாய் தந்தையரின் வளர்ச்சிக்குப் பிறகுதான் காதல் என்று காதலை ஏற்காமல் தட்டிக் கழிக்கின்றார். இதன் பிறகு என்ன நடக் கிறது என்பதுதான் மீதிக் கதை.



தாய் – தந்தையரின் சொல்லைத் தட்டாமல் வரும் நல்ல பையனாக வருகின்றார் பாலா. தன் அண்ணனுக்காக காதலைக்கூடத் தியாகம் செய்ய முன்வரும்பொழுது, நல்லாகவே நடித்திருக்கிறார். பாலாவுக்கு இப்படியான கதையம்சங்கள் உள்ள படங்கள் நன்றாகவே பொருந்தியிருக்கிறது. சாயாசிங்கின் நடிப்பு பெரிதாக எடுபடவில்லை என்றே கூறவேண்டும். பாலாவின் அண்ணாவாக சத்யா நடித்திருக்கிறார். நிழல்கள்ரவியும் சென்டிமெண்டுடன் நன்றாகவே நடித்திருக்கிறார். பரத்வாஜ் உடைய பின்னணி இசை பெரிதாகச் சொல்லுவதற்கு ஒன்றுமேயில்லை. பாடல் களில்கூட ஏமாற்றிவிட்டார். ஒளிப்பதி வாளர் கே.வி. மணியினுடைய ஒளிப் பதிவு பாராட்டுக்குரியது. திரைக் கதை+இயக்கம் சூரியன். படத்தின் முன்பகுதி வெறும் அலட்டல். ஆனால் பின் பகுதி ஓரளவுக்கு பரவாயில்லை.




'அம்மா அப்பா செல்லம்' செல் லுமா?

P.N.S

# மரபணு சோதனைக்குக் கோழிக்குஞ்சு

மரபணு மர்மங்களைக் கோழிக்குஞ்சுகளின் மரபணுக்களைச் சோதிப்பதன்மூலம் இலகுவில் விடுவிக்கலாம் என, அமெரிக்க ஆய்வாளர்கள் கூறுவதாக நேச்சர் சஞ்சிகை கூறுகிறது. மரபணுத் தொடரின் உயிரியல் இரசாயன வலையமைப்பைக் கண்டறிவதன் மூலம், பறவைக் காய்ச்சல் நோய்க்கான தீர்வுகளைக் கண்டறிய முடியும் எனக் கூறப்படுகிறது.



இதைவிட மரபணுப் பொறிமுறை விருத்தி மூலம் உணவு உற்பத்தித்துறையில் சிறப்பான இறைச்சி இனப் பறவைகளை உருவாக்கமுடியும் எனவும் சுட்டிக்காட்டப்படுகிறது. முதற்கட்டமாக இத்தகைய ஆய்வுகளுக்குக் கோழிக்குஞ்சுகளே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

# அதிகரிக்கும் சிறுவர் புற்றுநோய்


கடந்த மூன்று தசாப்த காலமாகச் சிறுவர்கள் மீதான புற்றுநோய்த் தாக்கம் படிப்படியாக அதிகரித்து வருவதாக 19 ஐரோப்பிய நாடுகளில் ஆய்வுகளை மேற்கொண்ட பிரான்ஸிலுள்ள புற்றுநோய்க்கான சர்வதேச ஆய்வகம் தெரிவிக்கிறது.



1970 ஆம் ஆண்டுக்கும், 1990 ஆம் ஆண்டுக்கும் இடையில் 1.5 சதவீத அதிகரிப்பு சிறுவர்களிடையே காணப்படுகிறது. இதற்கான காரணத்தை இன்னும் கண்டறிய முடியவில்லை என, ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எனினும், மேற்குலகில் காணப்படும் வைத்திய வசதியால், 80 சதவீத சிறுவர்கள் புற்றுநோயின் பிடியிலிருந்து தப்பித்து விடுகின்றனராம்.

# இதயநோய் விரல் நுனியில்

கைவிரல் முனைகளில் ஏற்படும் இரத்த அழுத்த வேறுபாட்டைக் கொண்டு, இதய நோய்த் தாக்கத்தை ஆரம்பநிலைகளிலேயே கண்டறிய முடியும் என, அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இந்தச் சோதனை இலகுவான முறையாக இருந்த போதிலும், பலர் இதைச் செய்யத் தவறிவிடுகின்றனர்.





நாடித்தொகுதியில் படியும் கொழுப்புகளும், இதய நோய் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்று. நாடியூடான பயணம் தடைப்படும்போது, அங்கு ஏற்படும் இரத்த அமுக்கத்தை விரல் நுனிகளில் இலகுவாக உணர முடிகிறது எனக் கூறுகின்றனர்.

# புகை நுண்ணறிவுக்கும் பகை!

புகைத்தலால் மனிதனின் நுண்ணறிவில் கூடுதலான பாதிப்பு ஏற்படுத்தப்படுவதாக இங்கிலாந்தின் அபர்டீன் மற்றும் எடின்பரோ பல்கலைக்கழகங்களில் செய்யப்பட்ட ஆய்வுகள்மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐந்து வெவ்வேறுவகையான சோதனைகளைப் புகைபிடிப்போர் மத்தியிலும், புகைபிடியாதோர் மத்தியி லும் மேற்கொண்டு, எடுக்கப் பட்ட முடிவுகள் நியூசயன் டிஸ்ட் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளது.




சுமார் 465 பேர் 1947 ஆம் ஆண்டு – தமது 11 வயதை அடைந்தபோது பரிசோதிக்கப்பட்டு, அதே நபர்கள் 2002 ஆம் ஆண்டு 64 வயதானபோதும் பரிசோதிக் கப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களது ஞாபகசக்தி, கற்றல் செயற்பாடு, தகவல் பரிமாற்றம் என்பவற்றில் வீழ்ச்சிப்போக்கு அவதானிக்கப்பட்டுள்ளது.

# புதிய ரொயாட்டா கார்

ரொயாட்டா கம்பனி புதிய வகையான இயந்திர மனிதர்களால் இயக்கக் கூடிய கார் தயாரிப்பு முயற்சியில் தற்போது ஈடுபட்டுக் கொண்டுவருகிறது. இதிலே காணப்படுகின்ற இயந்திர மனிதர்கள் மிகவும் தத்துருவமாக வடிவமைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை மற்றைய கார் கம்பனிகளுடன் போட்டி போடக் கூடியவாறு இத்தகைய கார்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இயந்திர மனிதர்கள் காரினுடைய முழு இயக்கத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.



இவற்றின் தாக்கம் 2005 ஆம் ஆண்டளவில் உலகளாவிய ரீதியில் தெரியும் என ரொயாட்டா கம்பனி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தக் கார்களை உலகச் சந்தையில் 2004 ஆம் ஆண்டிலேயே விடுவதற்கு ரொயாட்டா கம்பனி முயற்சி செய்தது. ஆனால் துரதிஷ்டவசமாகமுடியவில்லை. வாகன ஓட்டிகளாகத் தொழிற்படக் கூடிய இந்த இயந்திர மனிதர்கள் இன்றியும் இந்தக் கார் இயங்கக்கூடியதாக உள்ளது. இந்தக் கம்பனிக்குப் போட்டியாக எத்தனையோ புதிய கார்களை மற்றைய கம்பனிகள் விட்டாலும், அவற்றையெல்லாம் மிஞ்சிப் புதிய வகையான நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய கார்களைச் சந்தைக்கு விடுவதில் ரொயாட்டா கம்பனிக்கு நிகரில்லையெனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாப் திட்ட புனரமைப்புப் பணிகள் 2011 வரை தொடர்ந்து நடக்கும்

## பிரதித் திட்டப் பணிப்பாளர் வினோதராஜ் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

நியாப் நிறுவனம் - 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 4 ஆண்டு காலமாகத் தனது பணியை செவ்வனே செய்துவருகிறது. இதில் நியாப் - 1 பணியை இந்தமாத இறுதித் திகதியுடன் நிறைவு செய்து, நியாப- 2 பணியாக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரையான 6 ஆண்டுகளில் திட்டமிடலுடன் தனது புதிய பணியை ஆரம்பிக்கவுள்ளதென, நீர்ப்பாசன பிரதிப் பணிப்பாளரும் நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளருமாகிய ஏ.கே.வினோதராஜ் தெரிவித்தார்.

நியாப் திட்டத்தால் இதுவரை காலமும் செய்யப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும், இனி வரும் காலங்களில் செய்யப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர்பாகவும் கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நியாப் திட்டத்தின் முதலாவது வேலைத்திட்டகாலமாக 2001 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி தீர்மானிக்கப்பட்டு, வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக உலக வங்கியால் 223 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படடது. இந்த நிதிக்கமைவாக முதற்கட்டமாக 40 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, அந்தக் கிராமங்களுக்கான நீர்ப்பாசன வசதிகள் அமைத்துக்கொடுத்தல், வீதிகள் புனரமைத்தல், குடிநீர்க்கிணறுகள் அமைத்துக் கொடுத்தல், பொது மண்டபம் அமைத்து அதற்குத் தேவையான தளபாட, மின்சார வசதிகள் செய்து கொடுத்தல் மற்றும் மக்களின் ஜீவனோபாய கடனுதவி போன்றவற்றை மேற்கொண்டது.

இந்தத் திட்டத்துக்காக தலா ஒவ்வொரு கிராமத்துக்கும் 7 தொடக்கம் 8 மில்லியன் ரூபா செலவு செய்தோம். இவ்வாறு செய்த வேலைத்திட்டங்களில் 90 வீதமானவை நிறைவு பெற்றுவிட்டன. மிகுதியான வேலைத் திட்டங்கள் தொடர் மழையால் தடைப்பட்டுள்ளன. காலநிலை சீரடைந்து, வெள்ளம் வழிந்தோடியதும் எமது வேலைத திட்டங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுவிடும். இந்த வேலைத் திட்டத்துக்காக, இனனும் 3 மாத காலம் தேவைப்படும். இதுவரை இந்த வேலைத்திட்டங்களுக்காக 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை 178 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுவிட்டது. மிகுதியான வேலைத்திட்டங்களுக்கு 35.8 மில்லியன் ரூபா உளளது. இந்த மிகுதியாகவுள்ள பணத்தில் பிடிகாசு, இறுதிக் கொடுப்பனவுகள் அனைத்தும் 2005 ஆம் ஆண்டு, முதல் மூன்று மாத காலப்பகுதிக்குள் கொடுத்து முடித்துவிடுவோம்.

அடுத்த கட்டமாக நியாப் திட்டம் 2 இற்கான வேலைத்திட்டத்தில 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, இந்த 25 கிராமங்களிலும் தலா ஒவ்வொரு கிராமத்துக்கும் 7 தொடக்கம் 8 மில்லியன் ரூபா செலவில் மேற்குறிப்பிடப்பட்ட புனரமைப்புப் பணிகளை செய்யவுள்ளோம். இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக இரணைமடுக் குளத்தை மட்டுப்படுத்தப்பட்டளவில் மீள்புனரமைப்பு செய்யவுள்ளோம்.

இதற்காக 1000 மில்லியன் ரூபா நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக 2005 ஆம் ஆண்டு முற்பகுதியில் - 200 மில்லியன் ரூபா செலவில் இடது கரைப் பக்கமாகப் புனரமைப்புச் செய்வதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

இந்தத் திட்டம் தொடர்பாக எம்மால் தயாரிக்கப்பட்ட கூட்டறிக்கை, உலக வங்கி வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைக்காக சம்மந்தப்பட்டவர்களுக்கு அனுப்பியுள்ளோம். அவர்களிடமிருந்து இந்த குளக்கட்டு புனரமைப்பு தொடர்பான திருத்த அறிக்கை வந்ததும், குறுகியகால அளவில் இந்தக் குளத்துக்கான வேலைத் திட்டத்தைத் தொடங்கவுள்ளோம்.

இரணைமடு புனரமைப்பு பணி தொடங்கவுள்ளதால் இடது கரை துருசு முற்றாகப் பூட்டப்பட்டு, சிறுபோக நெற்செய்கை நிறுத்தப்படவுள்ளது, வலது கரை துருசு திறக்கப்பட்டு நீர் பாய்ச்சப்படும் விளைநிலங்கள் அனைத்துக்கும் சிறுபோக விதைப்புக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது, இந்தக் காலபோக செய்கையின் விதைப்புக காலத்தை அரச அதிபரும், விவசாயத் திணைக்களமும் இணைந்து டிசம்பர் 31 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்துள்ளனர்.

தொடர்ந்து பெய்த மழையால் பெரும்போக நெற்செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது - எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, கால நீடிப்பு செய்யலாம். 3 ஆம் கட்ட நடவடிக்கையாக விவசாய அபிவிருத்திக்காக 3 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆய்வு நடவடிக்கைகள் செய்து விவசாயிகளுக்கு மானிய உதவிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நியாப்பின் வேலைத் திட்டங்கள் நீண்டு விரிவுபட்டு சென்று கொண்டேயிருக்கும். இந்த பிரதேசத்தில் ஆறுகள், குளங்கள் நிறைந்து காணப்படுகிறது. ஆனால், நாட்டில் யுத்தம் வெடிககுமாக இருந்தால், செய்து முடிந்தவை தவிர புனரமைப்பதற்குத் திட்டமிட்டுள்ள அனைத்து வேலைகளும் வெறும் வாய்ப்பேச்சாகப் போகும் என அவர் மேலும் தெரிவித்தார். (க)

### தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

மன்னார் - இலுப்பைக் கடவைப் பிரதேசத்தில் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இந்தப் பிரதேசத்தின் பிரதான வீதிகளிலுள்ள வியாபாரநிலையங்கள், சந்தை என்பவற்றின் கழிவுப் பொருட்கள் பிரதான வீதிக்கு அருகில் கொட்டப்படுவதாலும், அந்த இடததில் நீர்தேங்கிக் காணப்டுவதாலும் இங்கு துர்நாற்றம் வீசுகிறது.

இது தொடர்பாக சம்மந்தப்பட்டவர்கள் கவனம் எடுக்கவேண்டும் என இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

### கலந்துரையாடல்

கிளிநொச்சியில் சர்வதேச அரச சார்பற்ற மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில், திட்டமிடல் செயலக துணைப் பொறுப்பாளர் மாறன் தலைமையில் இடம் பெற்றது. இதில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் தமிழிசை அரங்கு சிறப்பாக நடைபெற்றது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரியின் மார்கழிமாத தமிழிசை அரங்கு நேற்று முன்தினம் மாலை நுண்கலைக் கல்லூரிப பொறுபபாளர் தணிகைமாறன் தலைமையில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச் சுடரை தாயகத்தின் மூத்த கலைஞர் பிலிப்யோன் கவாஸ் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை அரசியற்துறை சமாதானச் செயலகப் போராளி தர்சன் ஏற்றிவைத்தார். மாவீரர்களுக்கான ஈகச் சுடரை நவம் அறிவுக்கூடப பணிப்பாளர் கலைக்கோன ஏற்றினார்.தொடர்ந்து கலைநிகழ்வுகள் ஆரம்பமாகின.

மேடை நிகழ்வுகளில் முதல் நிகழ்வாக, மறைந்த இசைமேதை எம்.எஸ்.சுப்புலட்சுமி நினைவாக ஆசிரியை இசைக்கலைமணி கமலகாந்தன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். தொடர்ந்து நுண்கலைக்கல்லூரி மாணவர்களின் வாய்ப்பாட்டு, இளையோர் தமிழிசை அரங்கின் கலாவித்தகர் சத்தியமோகனின் வாய்ப்பாட்டு இசையரங்கம் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வின் சிறப்புரையினை நவம் அறிவுக்கூட பணிப்பாளர் கலைக்கோன் நிகழ்த்தினார்.

அடுத்து நுண்கலைப் பரீட்சையில் அதிவிசேட சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் நிகழ்வு, சிறப்புத் தமிழிசை அரங்கு ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் போராளிகள், கலைஞர்கள், மாணவர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## கனேடிய தமிழ் வானொலியினரால் வெள்ளத்தால் பாதித்தவர்களுக்கு நிதி

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக கனேடிய தமிழ் வானொலியைச் சேர்ந்தவர்களும், நேயர்களும் கனேடிய வாழ் தமிழ் மக்களும் இணைந்து, சேகரித்த 60 லட்சம் ரூபா நிதி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கொழும்பு இணைப்பாளரிடம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமாறு ஏற்கனவே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் ஈழத்தமிழ் மக்களிடம் கோரப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. இதன் ஒரு அங்கமாக கனடாவாழ் தமிழ் மக்களிடம் வானொலியினர் திரட்டிய நிதியின் ஒரு தொகுதிப் பணம் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் ஒரு தொகுதி மீண்டும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.




### தொழில்நுட்பச் சான்றிதழ் பரீட்சை

கிளிநொச்சி மாவட்ட தொழில்நுட்பக் கல்லூரி நிறுவக மாணவர்கள், லண்டன் சிற்றி கில்ட்ஸ் நிறுவன தொழில்நுட்பச் சான்றிதழ் பெறுவதற்கான பரீட்சையில் தோற்றுவதற்கு கொழும்பு சென்றுள்ளனர்.

இந்த தொழில்நுட்பக் கல்லூரியில் லண்டன் ரி.ஆர்.ரெக் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த மாணவர்களே இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கொழும்பு சென்றுள்ளனர். (இ)

## மாயவனூர் ரங்கநாதபெருமாள் கோவிலில் திருப்பாவை உற்சவம் நடைபெறுகின்றது

வட்டக்கச்சி மாயவனூரில் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதப்பெருமாள் கோவிலில் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் திருப்பாவை உற்சவம் ஆரமபமாகி, தொடர்ந்து 29 நாட்கள நடைபெறும்.

இந்த ஆலயத்தின் வைகுந்த ஏகாதசிப் பெருவிழாவாக, நாளை காலை மூலமூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும், இரவு நான்கு சாமப்பூசைகளும் இடம்பெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து மோட்ச அர்ச்சனையும் சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்றையதினம் நாம பஜனை, சிறப்புச் சொற்பொழிவுகள், பகவத்கீதை முற்றோதல் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. இரவு 10 மணிக்கு ஆனந்த சயன மூர்த்திக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் பின்னர் வைகுண்ட வாசல் திறக்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (9)

## சின்னத்தம்பி வித்தியாலயத்தில் சமகால அரசியற் கருத்தரங்கு

சமகால அரசியற் கருத்தரங்கு- ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி சைவ வித்தியாலயத்தில் கடந்த சனிக்கிழமை, ஒட்டுசுட்டான் - மாங்குளம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் யோகன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்புரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் முகுந்தன் நிகழ்த்தினார்.அவர் தனதுரையில் தற்போதைய அரசியல் நிலையை மிகவும் விரிவாக எடுத்துரைத்தார். இநத நிகழ்வில் ஒட்டுசுட்டான் பகுதி மக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

## உயர்தர விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கு வெற்றி நிச்சயம் எனும் போட்டிப் பரீட்சை

பல்கலைக்கழக புதுமுக மாணவர் ஒன்றியத்தால், தமிழீழ மாணவர் அமைப்பின் அனுசரணையுடன் கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கு நடத்தப்பட்டுவரும், வெற்றி நிச்சயம் எனும் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சை கிளிநொச்சி பன்னங்கண்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெளளிக் கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணவர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு தமிழீழ மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.

## அறுநூறு குடும்பங்கள் குடியமர்ந்த காணி விற்றதற்கு எதிராக நீதிமன்றில் முறைப்பாடு

(வவுனியா)

வவுனியா - திருநாவற்குளப் பிரதேசத்தில் 600 குடும்பங்கள் குடியிருந்த காணி முழுவதும் காணியில் இருப்பவர்களுக்குத் தெரியாமல் வேறுநபர் ஒருவருக்கு விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு செயயப்பட்டுள்ள முறைப்பாடு தொடர்பான விசாரணைகளை வவுனியா காவல்துறையினர் ஆரம்பித்துள்ளனர்.

இந்தக் காணியை விற்பனை செய்தவர், காணியை வாங்கியவர் காணி விற்பனை செய்தமைக்கான காணி உறுதியை எழுதிய சட்டத்தரணி, காணி மாற்றம் செய்த காணிப்பதிவு உத்தியோகத்தர் உட்பட சம்மந்தப்பட்டவர்களை விசாரணைசெய்து, அறிக்கை சமர்ப்பிக்குமாறு அந்த உத்தரவில் பணிக்கப்பட்டுள்ளது. அத்துடன், காணியை விற்பனை செய்தவரையும், காணி வாங்கிய வரையும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யும்படியும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தில் இந்தக் காணி தொடர்பான வழக்கு நிலுவையில் இருக்கின்ற சமயத்தில் காணியில் உள்ள 600 குடும்பங்களுக்குத் தெரியாமல் நடைபெற்றுள்ள காணி விற்பனை தொடர்பான காணி உறுதியை எழுதிய சட்டத்தரணி நீதிமன்றத்தின் தடையுத்தரவை மீறிச் செயற்பட்டமையால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்தும், இந்தச் செயற்பாட்டின் மூலம் அவர் சட்டத்தரணிகளுக்கான ஒழுக்கக் கோவையை மீறியுள்ளார் என்பதற்கான சான்றுகள் இருக்கின்றனவா என்பது குறித்தும் ஆய்வுசெய்து, நீதிமன் றத்துக்குத் தெரிவிக்குமாறும் [illegible] வவுனியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

### உழவு இயந்திரத்திலிருந்து தவறி விழுந்தவர் காயம்

உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்தவர் தவறி வீழ்ந்து காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை 11.30 மணியளவில் கல்மடுநகரில் இடம்பெற்றது. இதில் நாகேஸ்வரன் ஆதிஸ் (வயது - 14) என்பவரே, தலையில் பலத்த காயமடைந்தார். இவர் கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார். (இ)

### வவுனியா நீதிமன்றில் 5000 வழக்குகள் தீர்க்கப்படவில்லை

வவுனியா - மாவட்ட நீதிமன்றத்தில் இதுவரையில் 5 ஆயிரம் வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வழக்குகள் தீர்க்கப்படாமல் இருப்பதற்கு அதற்கான போதியளவு சாட்சிகள் இல்லாமை மற்றும் விசாரணைக்காக வழக்காளிகள், எதிராளிகள் ஒழுங்காக வராமை போன்ற காரணங்களால் இந்த வழக்குகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இந்த வழக்குகள் தொடர்பாக நீதிவான் அதிகளவு கவனம் செலுத்திவருவதாகத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சீரினும் சீரல்ல செய்யாரே சீரோடு*
*பேராண்மை வேண்டு பவர்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## இன எழுச்சியும், இன ஒருமைப்பாடும் இன விடுதலைக்கான அவசியங்களே..!

தமிழர் தாயகப் பிரதேசங்களான வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கத்தின் யுத்தமுனைப்பைக் கண்டித்து, தமிழ் மக்கள் பரந்தளவில் வெகுஜனப் போராட்டங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ளமையானது, சமாதான முயற்சிகள் மீதான அரசின் விசுவாசத்தை அவர்கள் இனிமேலும் நம்பத்தயாராக இல்லை என்பதையும், தங்களின் ஒன்றிணைந்த உணர்வெழுச்சிதான் தமிழ் மக்களுக்கான சுத்ந்திர விடுதலையைப் பெற்றுத்தருமென்பதையும் அவர்கள் உறுதியாக உணரத்தலைப் பட்டுவிட்டார்கள் என்பதையுமே மிக வெளிப்படையாக உணர்த்தி நிற்கிறது.

கடந்த மூன்றாண்டுகாலப் பொறுமையின் பின்னர், சமாதானம் தொடர்பான தமது எதிர்பார்ப்புகள் அனைத்தையும் அரசு நிறைவேற்றப்போவது மட்டுமல்ல, கருத்தில் கொள்ளப் போவதுமில்லை என்ற யதார்த்த நிலையை எல்லா வகை யிலும் உறுதி செய்துள்ள நிலையிலேயே மக்கள் அரசுக்கெதிராக, அதன் ஏமாற்று அரசியல் நகர்வுகளுக்கெதிராகத சமாதான எதிர்ப்புச் செயற்பாடுகள் மற்றும் பிரசாரங்களுக்கெதிராக வீதியில் இறங்கிப் போராடவேண்டிய நிர்ப்பந்தத்தை தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளதென்றால் அது மிகையில்லை.

இனிமேலும் எதிர்பார்ப்புகளுடனும், வெறும் நம்பிக்கைகளுடனும் சுதந்திர உரிமை குறித்த கனவுகளுடன் காலம் கழித்தலும், பேச்சுவார்த்தைகள் என்ற மாய வார்த்தையில் மனத்தை லயிக்கவைத்து அற்புதங்கள் நிகழுமென அன்றாடம் ஊடகச் செய்திகளுக்காகக் காத்திருப்பதும் அர்த்தமற்றவைகளே என்பது தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தரும் விடயங்கள் என்பதால், தங்களைத் தொடர்ந்தும் சிங்கள ஆட்சியாளர்கள் ஏமாளிகளாக்க முனையும் செயற்பாடுகளுக்கு இளிச்ச வாயர்களாக அங்கீகாரமளித்து கைகட்டிப் பார்த்துக் கொண்டிருக்கத் தயாரில்லை என்ற அழுத்தமான செய்தியை, இந்த மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் மூலம் ஆட்சியாளருக்கு உணர்த்தவே செய்யும்.

ஆனால், முற்றிப்போய்விட்ட சிங்கள மேலாதிக்கவாத வெறியுணர்வின் தன்மையானது; அவர்களை நியாயபூர்வமான முறையில் மனோதர்மத்துடன் ஜனநாயக ரீதியில் அவர்களை சிந்தித்து செயற்பட வைக்கப்போவதில்லை என்ற உண்மையை கடந்தகால வரலாற்று நிகழ்வுகள் மூலம் பெற்ற பட்டறிவுப் பாடம் தமிழ் மக்களுக்கு உணர்த்தியே உள்ள நிலையில், தமது தற்போதைய எழுச்சிப் போராட்டம், மீண்டும் விடுதலைப்போரை அரசுக்கு எதிராக அதன் வழியிலேயே இன்னும் அதிக பலத்துடனும், தீர்க்கமான உறுதியுடனும் எதிர்கொள்ளவைப்பதற்கான முன்னோடிச் செயற்பாடாகவே இருக்கும் என்பதே சரியானதாகும்.

இரு சதாப்தகால யுத்தத்தின்போது மூர்க்கத்தனமானதும், மனித உரிமைகளை முழுமையாக நிராகரித்ததுமான இராணுவ ஒடுக்குமுறைகளைப் பயன்படுத்தியும் - தமிழின அழிப்பை இலக்காகக் கொண்ட அரசியல் மூலோபாயங்களை வகுத்தும் செயற்பட்ட சிங்கள மேலாதிக்க - இனவாத - ஆட்சியாளர்கள் போரில் கிடைத்த தோல்வி காரணமாகவும்த நாட்டின் பொருளாதாரம் மோசமாக பாதாளத்தை நோக்கி வீழ்ந்து கொண்டிருந்த காரணத்தாலுமே விடுதலைப் புலிகளின் சமாதான சமிக்ஞையைப் பின்தொடரவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாயினர்.

இந்தச் சமாதான நகர்வு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு - அவர்களின் அபிலாஷைகளுக்கேற்ப ஒரு தீர்வைக் காணும் விசுவாசத்துடனும், தேசநலன் மீதான அக்கறையுடனும் அரசால் மேற்கொள்ளப்பட்டவையென்று எந்த வகையிலும் கூறமுடியாது.

அவர்களால் எந்தவகையிலும் தமிழ் மக்களை - அவர்களின் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளை என்றுமே மனித நேயத்துடனும், ஜனநாயக உணர்வுடனும், சகோதாரத்துவப் புரிந்துணர்வுடனும் அணுக முடிந்தது கிடையாது. அணுக முயன்றதும் இல்லை.


இனப்பிரச்சினை தீவிரம் கொண்ட காலத்திலிருந்து இன்று வரைக்கும் நடைபெற்ற சமாதானப் பேச்சுக்களும் தீர்வுக்கான முயற்சிகளும் அரசின் அரசியல் - இராணுவ நலன்களை கவனத்தில் வைத்து திட்டமிடப்பட்ட சதிகளேயன்றி வேறில்லை. இதன் காரணமாகவே அவை தோல்வியைக் காண நேர்ந்தது.

இன்றைய சமாதான நகர்வுகளிலும்த இந்த நாசகார உத்திகளுடன்கூடிய வியூகங்களையே அரசு அமைக்கத் திட்டமிடுவதனாலேயே அமைதி முயற்சியில் அனுசரணையாளர்களாகச் செயற்படுவோரும் நம்பிக்கையிழந்துபோயுள்ளார்கள்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் தம்மைத் தமது எதிர்காலத்தை, தமது அரசியல் உரிமைகளை, தமது பாரம்பரிய தாயகத்தை, தமது தனித்துவத்தை பாதுகாக்க தாம் முன்னெச்சரிக்கையுடன் செயற்படவேண்டியது அவசியம் மட்டுமல்ல நியாயமும் கூட.

ஆகவே, இந்த இன எழுச்சிப் போராட்டங்கள் சமாதான முயற்சிகள் என்ற பெயரில் தாம் இனிமேலும் ஏமாறமுடியாது என்ற இறுக்கமான செய்தியை அரசுக்கும் - சர்வதேசத்திற்கும் உறுதியாக உணர்த்துவதாக அமைய வேண்டும். அதற்காக அனைவரும் உணர்வெழுச்சியுடன் செயற்படவும் வேண்டும். ஏனென்றால் இதுவும் நமது வரலாற்றை பாதுகாக்க நாம் செய்யவேண்டிய கடமையேயாகும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# கோதுமை மாவுக்குத் தட்டுப்பாடு; இனி ஆயுதங்களைச் சாப்பிடட்டும்!

காலையில் பாணும் பழமும் கைகளிலேந்தி நின்ற நிலையிலேயே அவசர அவசரமாக மென்று விழுங்கி வேலைக்கோ, பள்ளிக்கூடத்துக்கோ ஓடிப்போய் பழக்கப்பட்டுவிட்ட நம்மவர் பலர், கொஞ்ச நாட்களாகவே படும்பாடு பரிதாபத்துக்குரியது!

கடைகளில் காலையில் வெளிப்படும் வார்த்தை 'பாண் இல்லை, பணிஸூம் இல்லை'. 'காலையில் கடை திறக்கு முன்னே எல்லாம் வித்துப் போச்சா' என்று ஒரு பெரியவர் கடைக்காரரைப் பார்த்துக் கவலையுடன் கேட்டார்.

இப்ப மாவுக்குத் தட்டுப்பாடு எண்டு தெரியாதா பெரிசு என்ற கடைக்காரர் மா வாங்குவதற்கு அரசாங்கத்திடம் பணம் இல்லையாம் என்றும் சொன்னார்.

அம்மா போகிற நாடுகளிடமிருந்தெல்லாம் ஏதோ உதவி கிடைக்கிறதென்று சொல்லுறாங்கள். இங்கேவந்த பாகிஸ்தான் பிரதமரும் ஏதோ கோடிக் கணக்கில் இலங்கைக்கு கடன் கொடுக்கிற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டாராம். இதுகளால கோதுமை மாவை வாங்க முடியாதோ? என்று அந்தப் பெரியவர் விடாமல் சொன்னார்.

அது அவையளின்ரை ஆயுதங்களை வாங்குவதற்காக அவையள் கொடுக்கிற கடனாம் என்று பேசிக்கொள்ளுகினம் என்றார் கடைக்காரர்.

அப்ப இந்தப் பேச்சுக்களெல்லாம் ஆயுதம் வாங்கிற பேச்சுத்தான். இனி கோதுமை மாவுக்குப் பதிலாக துப்பாக்கிகளையும், பீரங்கிகளையும், குண்டுகளையும்தான் மக்கள் கடித்துச்சாப்பிடவேண்டி வருமாக்கும் என்று பெரியவர் சொல்லிக்கொண்டே படியிறங்கினார்.

இந்தக் கோதுமைமா எப்ப எங்கட நாட்டுக்கு வந்தது, அதற்கு முதல் நீங்கள் என்னத்தைச் சாப்பிட்டனீங்கள் என்று கடைக்காரர் விடாமல் கதை கொடுத்தார்.

படியிறங்கிய முதியவர் சற்று நின்று தம்பி இரண்டாவது உலகப்போர் வந்த சமயத்தில் அதாவது 1935 - 40 ஆம் ஆண்டுகளில்தான் இங்க கோதுமைமா வந்தது. அந்தச் சமயத்தில்தான் கூப்பன் கடைகளும், சங்கக் கடைகளும் வரத்தொடங்கின. சாப்பாட்டுச் சாமான்களை எல்லாருக்கும் பகிர்ந்தளிப்பதற்காக கூப்பன் கொடுத்தாங்கள். குடும்பத்திலிருக்கிற ஆட்களைக் கணக்குப் பார்த்து அவர்களுக்கேற்ற விதத்தில் அவுன்ஸ் கணக்கிலும், இறாத்தல் கணக்கிலும் இதைக் குடுத்தினம். அரிசி, மாவு, சீனி என்று அத்தியாவசியப் பொருட்கள் கூப்பனுக்குப் பங்கீட்டுக்கு குடுத்தினம் என்றார் முதியவர்.

கோதுமை மாவும் இப்படித்தான் கொடுக்கத் தொடங்கினவையளோ என்று கடைக்காரர் விடாமல் கேட்டார்.

கோதுமை மா இதற்குமுன்னரும் இங்கே கிடைச்சதுதான். அதை அப்ப கோதுமை மாவு என்று சொல்லுறதில்லை. பசை காச்சிறமா என்றுதான் சொல்லுவினம். கடைகளில் போய் பசை காச்சிற மா என்று சொல்லி வாங்கி, பசை காச்சி நோட்டீஸ் ஒட்டுவாங்கள், பொடியள் கொடிகட்டி, மாகாச்சிப் பசைகிண்டி ஏத்தி விளையாடுவாங்கள்.

பிறகு இந்த மாதான் சாப்பிடவேண்டும் என்று முதல் முதல்ல கூப்பன் கடைக்காரரும், சங்கக்கடை மனேஜர்மாரும் சொல்லிச்சினம். சில கடைக்காரர் கோதுமை மாவை எப்படியெப்படி சாப்பாட்டுக்குப் பயன்படுத்தலாமென்றும் சொல்லிக் குடுத்தினம். மாவைக் கவனமாக வறுத்து பிட்டு, இடியப்பம் செய்யலாம். மாவை அவித்தும் பிட்டு, இடியப்பம் அவிக்கலாம் என்றும், பச்சைமாவில் ரொட்டி சுடலாமென்றும் சொல்லிக்குடுத்தாங்கள்.

பிறகு எங்கட பொம்பிளையளுக்குச் சொல்லித் தெரியத் தேவையில்லாமல அவையள் அதில விதம்விதமாகப் பலகாரங் களும் செய்து வாய்க்கு ருசியாகவும், உடம்புக்குச் சத்தாகவும் செய்யத் தொடங்கீற்றினம் என்று முதியவர் சொல்லி முடித்தார்.

கோதுமை அரிசியும் இங்க குடுத்தவையளாம். இப்ப சலரோகக்காரர் கோதுமை அரிசிக்கும், ஆட்டா மாவுக்கும் திரிஞ்சாலும் கிடைக்குதில்லை என்று சொல்லுறாங்கள் என்றார் கடைக்காரர்.

ஓமோம் தம்பி. கோதுமை அரிசியும் முதல்ல இங்கே குடுக்கேக்க பெண்டுகள் கூடிநின்று அதை எப்படியெப்படியெல்லாம் பதப்படுத்திப் பயன்படுத்துவது என்பது பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு மனுஷி கோதுமை அரிசியை வாங்கிவந்து குத்தரிசி காய்ச்சிறமாதிரி இதைக் கழுவிப் பானைக்குள் போட்டுத் தண்ணீரைக் கொதிக்கவைச்சுச் சோறாக்கினாவாம். பிறகு பானைக்குள் அகப்பையைப் போட்டு எடுத்தால் பானையும் அகப்பையும் ஒட்டிக்கொண்டு பெரும் பாடுபட்டுப் பானையை உடைச்சுப் போட்டுது. அதைக் கதைகதையாய்ச் சொல்லித் திரிஞ்சாவாம்.

கோதுமை அரிசியை சிலர் வறுத்து இடித்து சிறு குருணல், பெருங்குருணல் எடுத்து உப்புமாக் கிண்டியும், கஞ்சி காய்ச்சியும் சாப்பிட்டினம். பிறகு அதிலேயும் பல தினுசான காலை உணவுகளைச் சமைக்கப் பழகிவிட்டினம்.

மெய்தான், வட இந்தியாக்காரர் எல்லாம் நிறைய அல்வாவும், ஜாங்கிரியும், ஜிலேபியும், லட்டும் என்று முழு இனிப்புத்தான் தின்கிறவங்களாம். ஆனால் அவங்களுக்கு சலரோகம் வாறதில்லை. ஒவ்வொருத்தனும் குண்டோதரன்கள்போல இருக்கிறாங்கள். அவங்கள் சாப்பிடுகிற கோதுமை உணவுதான் இந்த வியாதியெல்லாம் வராமல் காப்பாத்துகிறதென்று சொல்லுறாங்கள்.

நாங்கள் பழையபடி குரக்கன், சாமை, பனங்கிழங்கிலிருந்து ஒடியல்மா, ஒடியல்பிட்டு, கூழ் என்று சாப்பிட்டால் போதும். எங்கடை பழைய ஆட்களெல்லாம் நோஞ்சான்களாகவே இருந்தவையள் என்று சொல்லிக்கொண்டே பெரியவர் இறங்கி நடையைக் கட்டினார்.

* * * * * * *

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் குளங்களைப் புனரமைத்து விவசாயத்துறையை விருத்தி செய்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் காரணமாக, விவசாயத்துறையில் நாடு தன்னிறைவை எட்டிக் கொண்டிருப்பதாக அரசாங்க ஊடகங்கள் முதன்மைச் செய்தியாக வெளியிட்டு வருகின்றன.

இதேசமயம் அரசாங்கப் பத்திரிகையொன்று தனது முதற்பக்கச் செய்தியாக விவசாயத்துறையில் நாடு தன்னிறைவு காணும் பாதையில் நெருங்கிவருவதாக வெளியிட்டிருக்கின்றது.

இதே முதல் பக்கத்தில் மற்றொரு செய்தியாக பாகிஸ்தான் இலங்கைக்கு ஏற்றுமதி செய்ய விரும்பும் அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம் ஆகிய பொருள்களுக்கு தீர்வைச் சலுகை கேட்டிருப்பதாகவும் வெளியிட்டிருக்கிறது.

அரிசியில் தன்னிறைவு காணும் நிலையை அரசின் நடவடிக்கைகளால் நாடு எட்டியிருக்கும் போது பாகிஸ்தானிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்குச் சலுகை அளிக்க வேண்டுமா?

இலங்கையில் அரிசி அமோகமாக விளைவதால் கோதுமைப் பண்டங்களின் பாவனையைக் குறைத்து அரிசிப் பாவனையை ஊக்கப்படுத்த வேண்டுமென்று சில மாதங்களுக்குமுன் சில அமைச்சர்கள் கூறியதாகச் செய்திகள் வெளிவந்தன.

இதேசமயம் அரிசிமாவில் பாண் தயாரிக்க முடியுமா என்று பரிசோதனை செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளதாக நினைவு!

டாக்டர் என்.எம் நிதியமைச்சராகப் பதவியேற்றதும் அத்தியவாசிய உணவுப்பொருட்களின் இறக்குமதிக்குத் தடை விதித்தால் நாட்டின் மூலை முடுக்குகளில்கூட தரிசு நிலங்களாகக் கிடந்த இடங்கள் கூட உழுதும், கொத்தியும் விளைச்சலுக்குப் பயன்படுத்தப்பட்டது.

இலங்கையில் செத்தல் மிளகாய், வெங்காயம், உழுந்து போன்ற உப உணவுப்பொருட்கள் வடக்கிலும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டன. இதனால் நாட்டுக்குத் தேவையான உப உணவுப் பொருட்கள் இங்கேயே உற்பத்தி செய்யப்பட்டன. இங்கிருந்து உழுந்து கூட இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதென்று சொன்னால் யாராவது நம்புவார்களா?

* * * *

கொழும்பிலும், கம்பஹாவிலும் கரையோரப் பகுதிகள் இரண்டு விநாடிகள் இலேசாகப் பூமி அதிர்ந்ததாம். இதனால் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் கொழும்பில் இப்பொழுது உயர உயரமாக வெள்ளவத்தை, தெஹிவளை, வத்தளை போன்ற பகுதிகளில கட்டப்பட்டுவரும் அடுக்குமாடிக் கட்டடங்களில் குடியிருப்போரும், குடியிருப்பதற்காக இந்த மாடிக் கட்டடங்களில் வீடு வாங்குவதற்காக முன்பணம் கட்டியிருப்போரும் என்ன நிலையிலிருப்பார்கள்? அடுக்கு மாடிக் கட்டங்களை நிர்மாணித்துவருவோரின் நிலை என்ன?

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்குத்திசையினிலே... - இந்திரஜித்

# சர்வதேசத்தை ஏமாற்றும் காலத்தை சிங்களத் தலைமைகள் கடந்துவிட்டன



ஐக்கிய தேசியக் கட்சியின் மீதான அரசாங்கத்தின் அடக்குமுறைகள் தொடரும் ஏதுநிலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

தற்சமயம் அரசாங்கம் முன்னர் சொன்



னது போலவே எஸ்.பி.திசநாயக்காவை வெலிக்கடைச் சிறையில் அடைப்பதில் வெற்றி கண்டுள்ளது. அதேநேரம் லஞ்சஊழல் உட்பட்ட இன்னும் பல குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி அவரை மேலும் பல ஆண்டுகள் சிறையில் அடைக்க முடியுமா? என அது முயற்சித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில், இவையாவற்றையும் செய்யும் போது எதிர்க்கட்சி தமது சில விடயங்களுக்கு இசைந்து வரும் என்பது அரசாங்கத்தின் எண்ணமாகவுள்ளது. ஜே.வி.பியைப் பொறுத்த மட்டில் தமது கட்சி உறுப்பினர்களை 1987 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெருமளவில் கொலைசெய்த கட்சியாகவே ஐக்கிய தேசியக் கட்சியைக் கருதுகிறது. எனவே அந்தக் கட்சியைச் சின்னாபின்னமாக்குவதே அதன் பிரதான எண்ணமாகவுள்ளது. அதன் அடிப்படையிலேயே அது ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் வேற்றுமையிலும் ஒற்றுமையைக் கண்டு, ஒப்பந்தம் மூலம் அரசாங்கம் ஒன்றை அமைக்கத் துணை போனது. இதன்படி இதுவரை அதன் ஏற்பாடுகள் யாவும் வெற்றிகரமாக முடிந்துள்ளன.

இதற்கு அடுத்து என்ன என அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அதன்படி அரசாங்கத்துக்குப் பிடி கிடைத்துவிட்டது. அதாவது முன்னர் ஜனாதிபதி செய்யத்தவறிய ஒன்றை, தற்போது செய்யப்போகிறார் என இதனைக் கொள்ளலாம். ஆர். பிரேமதாச ஜனாதிபதியாக இருந்த காலத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான அமைச்சர்களில் ஒருவராக செயற்பட்ட இன்றைய எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பெருமளவு ஜே.வி.பியினர் வதைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் பட்டலந்த விடயத்துக்கும் தொடர்பு இருப்பதாக அன்று முதல் ஜனாதிபதியும் ஜே.வி.பியினரும் குற்றம் சுமத்தி வந்துள்ளனர். பின்னர் வந்த ஒரு காலப்பகுதியில் குறிப்பிட்ட வதைமுகாம் விடயத்தை வெளியில் கொண்டு வந்து ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பாடம் கற்பிக்க முடியும் என்ற தோரணையில் ஜனாதிபதி எச்சரிக்கையும் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், தற்சமயம் அவருக்கு கிடைத்துள்ள ஜே.வி.பி கூட்டு இந்த விடயத்தை மீண்டும் பிரச்சினையாக்க உதவும் என்றே அரசியல் தரப்புக்களில் கதை உலாவுகிறது. அடுத்த ஆண்டின் முற்பகுதியில் பட்டலந்த வதை முகாம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்துக்கு வருகிறது. எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கம் ரணில்விக்கிரமசிங்கவின் மீது தமது சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமா? அல்லது அதனை துரும்பாகக் கொண்டு அவரைத் தமது அரசியலமைப்புத் திருத்தம் போன்ற குறுகிய நோக்க நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த முனையுமா என்பது காலத்தின் அடிப்படையிலான அரசியல் நகர்வுகளாக இருக்கப்போகின்றன. அரசாங்கம் இவ்வாறு யோசித்துக் கொண்டிருக்க, ஐக்கிய தேசியக் கட்சி இதனை முறியடிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதில் முதல் கட்டமே எஸ்.பி. திசாநாயக்கவை விடுவிக்கவேண்டும் எனக்கோரி அது ஏற்பாடு செயது நடத்திவரும் எதிர்ப்புப் பேரணியாகும். இந்த எதிர்ப்புப் பேரணியை தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரம் நடத்தி வருகின்ற போதிலும், கொழும்பில் ஏனைய கட்சிகளுடன் இணைந்து மேற்கொள்ளப்போகும் அரசாங்க எதிர்ப்பு ஜனநாயக மீட்புக் கூட்டத்தை, அந்தக் கட்சி தமது பலத்தைக் காண்பிக்கும் தளமாகப் பயன்படுத்திக்கொள்ள முனைந்துள்ளது.

இதற்கு அடுத்தபடியாக அந்தக் கட்சி, தமக்கு எதிரான - அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சர்வதேசத்துக்குக் கொண்டு செல்லும உத்தியைக் கையாள்கிறது. ஐக்கிய தேசியக்கட்சி இவ்வாறு அரசாங்கத்துக்கு அழுத்தங்களைக் கொடுக்க முனைந்து நிற்கின்ற நிலையில், சர்வதேசத்தின் மிக முக்



கியமான அழுத்தம் ஒன்று அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. சமாதான முயற்சிகளில் குழப்பம் நிறைந்த பல்பக்க நிலைத்தன்மையைக் கடைப்பிடித்து வரும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி, அண்மையில் நோர்வேயின் சமாதான முனைப்புத் தொடர்பாக வெளியிட்ட கருத்து இன்று அரசாங்கத்துக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக இதுவரை காலமும் தமது நிலைப்பாடு சரி எனவும் தமிழழ விடுதலைப்புலிகளே பேச்சுவார்ததைக்கு வரமறுக்கிறார்கள் என்றும் அரசாங்கம் ஒரு மாயையை ஏற்படுத்தி வந்தது. ஆனால் இன்றைய நிலையை நன்கு உணர்ந்ததைப் போல இலஙகைக்கு உதவி வழங்கும் நாடுகள் நோர்வே நாட்டை இலங் கையில் இருந்து விலகிச் செல்லக் கூறுவதன் மூலம், சமாதானத்துக்கு ஜே.வி.பியே தடங்கலை ஏற்படுத்தி வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது. இதில் அமெரிக்காவும் இணைந்து கொண்டு தமது கருத்தை வெளியிட்டிருப்பது இங்கு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஜப்பான் அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் என்பன ஜே.வி.பியின் கொள்கையை கணடித்திருப்பதானது, ஜனாதிபதிக்குப் பெரும கலவர நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, இடைக்கால நிர்வாக யோசனை குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதையே தாம் எதிர்ப்பதாக, ஜே.வி.பி உதவிவழங்கும் நாடுகளின் கூற்றுக்கு பதிலளித்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாத ஜப்பானியத் தூதுவர் அகியோ சூடா தமது கொள்கையில் மாற்றங்கள் இல்லை என ஐககிய தேசிய கட்சியின் சர்வதேச உறவுகளை கொண்ட ஒரு நாடாளுமன்ற உறுபபினரிடம் தெரிவித்துள்ளார். ஜே.வி.பி இடைக்கால நிர்வாக யோசனையின் அடிப்படையில் பேச்சுவார்ததையை நடத்தக் கூடாது என உறுதியிடுவது சமாதான நகர்வுக்குப் பாரிய தடங்கலை ஏற்படுத தியுள்ளதாகவும் அவர் கருத்துரைத்துள்ளார்.

எனவே ஜனாதிபதி ஐக்கிய தேசியக்கடசிக்கு எதிரான நடவடிககைகளை கைவிட்டு தமது பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் பால கவனத்தை செலுத்துவதன் மூலமே சர்வதேசத்தின் நன்மதிப்பைப் பெறமுடியும் என்ற நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளாா. இது இதுவரைகாலமும் நோர்வே இலங்கையில் ஆற்றி வரும் சமாதான பணிக்குக்கிடைத்த சர்வதேச அங்கீகாரம எனக கொளளலாம். அதேவேளை, தமிழழ விடுதலைப புலிகளின் இடைக்காலத் தன்னாட்சிக் கொள்கைக்கு அமெரிக்கர்களும் சான்று வழங்கியுள்ளதாகவே கருதமுடிகிறது. எனவே தென்னிலங்கையின் சிஙகளத் தலைமைத்துவங்கள் சர்வதேசததை ஏமாற்றும் தமது நிலைப்பாடுகளைக் கைவிடவேண்டிய காலம் மலர்ந்துள்ளமையானது, தமிழின விடுதலைக்கு ஒரு பிரகாசமான ஒளிக்கீற்றாகும் என்பதில் சந்தேகமில்லை.

தகவல் தொழில்நுட்பம்... த.தவரூபன்

# மின்னரசுக்கான ஏது நிலைகளும் தமிழ் தகவல் தொழில் நுட்பமும்

அதன் போது சில முன்னணிப் பாடசாலைகள் தமது சொந்தச் செலவில் ஆசிரியர்களை பணிக்கமர்த்தியிருந்தனர். இந்த நிலை இன்றும் பல பாடசாலைகளில் தொடர்கின்ற போதிலும், முன்னர் இருந்தவாறான நிலை இல்லை என்றே கூறவேண்டும் .

இடைநிலைக்கல்வியைப் பயிலும் மாணவன் ஒருவன் பாடசாலையிலே தனது கணினிக் கல்வியை ஆரம்பிக்கக்கூடிய சாத்தியப்பாடு இருக்கின்றது. உயர்தரக் கல்வியில் கணினிக்கல்வியானது, பொதுத் தகவல் தொழில்நுட்பம் என்ற பாடப் பெயரில் கட்டாயமாக்கப்படுகிறது. இது சில வருடங்களாக இழுபறிப்பட்டு இப்போதுதான் சாத்தியமாக்கப்பட்டிருக்கிறது. இது மேம்படுத்தப்பட வேண்டும். இந்த நிலையிலும் ஒரு கணினி கூட இல்லாத நிலையில் எத்தனையோ பாடசாலைகள் இருப்பதும் மனவருத்தத்திற்குரியது.

போரின் அவலங்களினால் சிதைவுற்று பல பாடசாலைககள் ஓலைக் கொட்டகைகளிலும் மர நிழல்களின் கீழும் இயங்குகின்ற பாடசாலைகள் குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகப்பகுதிகளில் இருப்பதை நாம் மறுத்து விடவோ, மறந்து விடவோ முடியாது. இது நம்ப முடியாததாக இருந்தாலும் உண்மை.

இங்கு தகவல் தொழிநுட்பக் கல்வியைக கொண்டு செல்வது முக்கியமான சவால் என்றாலும் அதனைச் செய்தேயாகவேண்டும். அவர்களிடம் போய் எவ்வாறு மின்னரசுபற்றி எடுத்துரைப்பது? இவர்களைப் புறந்தள்ளிவிட முடியாது. இன்று நிலவும் ஒருவிதமான சுமுக நிலையில் தகவல் தொழில் நுட்பத்தினை புகுத்துவதற்கான வழி திறக்கப்பட்டிருக்கின்றதேயன்றி மின்னரசில் இவர்களை இணைப்பதற்கான ஏது நிலைகள் இரண்டாம் கட்டத்தில் தான் உள்ளன.

இங்கெல்லாம் முதலில் தகவல் தொழில் நுட்பத்துககான ஏது நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இதன் மூலம் தான் ஈழத்தில் முழுமையான மின்னரசு ஒன்று நிறுவப்படக்கூடிய சாத்தியம் இருக்கும். இன்னமும் இந்தக் கல்வி சென்றடையாத இடங்களில் கூட இதனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் போது, ஆரம்பக் கல்வியிலேயே அதனைப் புகுத்துவது பற்றி அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்தவேண்டிய தேவை ஒன்று இருக்கிறது.

இந்தவிடயத்தில் எம்மையெல்லாம் மெய்சிலிக்க வைக்கக் கூடிய வகையில், போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டதும் மிகவும் பின்தங்கிய தமிழ் மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மையில் இலவச கணினிக்கூடம் ஒன்றை ஆரம்பித்திருக்கின்றனர். இந்தச் செய்தியை அறிந்தபோது நான் உண்மையிலே பேரானந்தம் அடைந்தேன். மின்னரசு ஒன்றும் எட்டாக்கனியல்ல, தமிழ் தகவல் தொழில்நுட்பம் வெற்றி நடை போடவும் மிகச்சிறந்த மின் சமுதாயம் ஈழத்தில் ஒன்று கட்டியெழுப்பப்படுவதற்குமான அத்திவாரம் தமிழர் தாயகத்தில் இடப்பட்டிருப்பது யாருக்குத் தான் மகிழ்வைத் தராது? இது போன்று நூற்றுக்கணக்கில் நிலையங்கள் நாடுமுழுவதும் அமைக்கப்படவேண்டும். அதற்கு அரசாங்கம்தான் வழிவகைகளை செய்ய வேண்டும்.

அதைவிடுத்து வெறுமனே தலைநகரில் மாநாடுகளையும் கண்காட்சிகளையம் வைத்து நாட்டில் மின் சமுதாயத்தை கட்டியமைத்து விடலாம் என்று கனவுகண்டுவிடமுடியாது. இதனை ஓரளவுக்காவது அரசாங்கம் உணர்ந்தாலோ என்னவோ ICTA ஊடாக சில செயற்பாடுகளை ஆரம்பித்திருக்கின்றது. இவற்றிலும் வடக்குக் கிழக்கு மாவட்டங்களைப் பொறுத்தவரையில் புறக்கணிப்பு நிகழ்ந்துள்ளது என்பதே எனது பொதுவான கருத்து.

பல்கலைக்கழக மட்டத்தில் தகவல் தொடர்பாடல் கல்வியானது ஆரம்பத்திலிருந்ததைவிட இப்பொழுது எவ்வளவோ முன்னேறிவிட்டது. மாணவர்களுக்கு அவர்கள் எந்தத்துறையில் கல்விபயின்றாலும் கணனி ஒரு பாடமாக்கப்பட்டிருக்கின்றது.

ஆராய்ச்சி மட்டத்தில் தகவல் தொழிநுட்பத்தினை அணுகும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாத இருக்கின்றது. வெறுமனே பரீட்சையை மையமாகக் கொண்டதாகவே இவர்களின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இன்று தகவல் தொழிநுட்பத்தில் கொழும்புப் பல்கலைகழகமும் மொரட்டுவ, பேராதனைப் பல்கலைக்கழகங்கள் தான் முன்னணியில் திகழ்கின்றன. ஈழத்தில் மினனரசுக்கான முயற்சிகளில் இவர்களின் பங்கு தான் மேலோங்கி இருக்கின்றது. என்பதற்காக மற்ற பல்கலைகழக மாணவர்கள், இயலாதவர்கள் என்று ஒரு போதும் கூறிவிட முடியாது.

அவர்களுக்கான வளங்களும் சந்தர்ப்பங்களும் இதுவரை வழங்கப்படவில்லை என்றோ மறுக்கப்பட்டது என்றோர்தான் கூறவேண்டும். இவர்களது திறமைகள் இனிவரும் காலங்களில் வெளியிடப்படக் கூடும் என்னைப் பொறுததவரையில் தத்தமது பிரதேசங்களில் தகவல் தொழில்நுட்பக்கல்வியை முழுமைப் படுத்துவதற்கும் அதன் மூலம் மின்னரசுக்கான ஏதுநிலைகளை ஏற்படுத்தவும் இவர்களால் பாரியளவில் பங்களிப்பு செய்யமுடியும் என நம்புகினறேன். அதுஅவர்களின் கடமையும் ஆகும்.

மின்னரசு பற்றி பேசவந்த எனது கட்டுரை பெருமளவில் ஈழத்தில் தமிழ் தகவல் தொழில் நுட்பம் பற்றியே கூடிய கவனம் செலுத்தியிருக்கிறது. காரணம் இல்லாமல் இல்லை மின்னரசு ஒன்று நிறுவப்படவேண்டும் எனின் மின் சமூகம் ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் ,முதலில் அடிப்படையான தகவல் தொழில் நுட்ப அறிவைத்தானும் மக்கள் பெற்றிருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்கள் வழங்கப் படவேண்டும். அதனைக் கருத்திற் கொண்டு தான் அதுபற்றி கூடிய கவனம் செலுத்தினேன்.

அதைவிடுத்து, அரசசேவைகளை வெறுமனே இலத்திரனியல் மயப்படுத்தி எவ்வித பயனுமில்லை அல்லவா? எது எப்படியோ, ஈழத்தில் தற்போது தகவல் தொழில் நுட்பம் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அந்தப் பாதையில் பல தடைக்கற்கள் இருக்கின்றன. இவற்றைக்களைந்து பாதையைச் செப்பனிட்டுச் சென்றால் ஈழத்தில் உறுதியான மின்னரசு அமைவது விரைவில் சாத்தியமே.

முற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் சிறைகளிலுள்ள கைதிகளில் 170 பலஸ்தீனர் ஓரிரு தினங்களில் விடுதலை



இஸ்ரேலிய அமைச்சரவை வழங்கிய அனுமதியை அடுத்து, சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பலஸ்தீனக் கைதிகளில் 170 பேரை அடுத்த ஓரிரு தினங்களில் இஸ்ரேல் அரசாங்கம் விடுதலை செய்யவுள்ளது.

இந்த விடுதலையானது எகிப்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய உளவாளி ஒருவரை எகிப்திய ஜனாதிபதி கொஸ்னி முபாரக் விடுதலை செய்வதற்கு உடன்பட்டதன் ஒருபகுதி எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கைதிகள் மற்றும் தமது உளவாளி ஒருவரின் விடுதலையானது முபாரக்குடனான உறவை மேலும் ஆழமாக்குமென இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்தார்.

இந்தக் கைதிகள் விடுதலைக்கு அனுமதியளித்த இஸ்ரேல் அமைச்சரவை இந்த நடவடிக்கையானது யாசிர் அரபாத் மறைந்த பின்னரான பலஸ்தீனத்தின் தலைவர்களுடனான உறவில் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்துமெனத் தெரிவித்தது.

விடுதலை செய்யப்படவுள்ள 170 கைதிகளில் 120 பேர் பலஸ்தீனத்தின் பத்தா அமைப்பைச் சேர்ந்தவர்களெனவும், ஏனையோர் சட்டவிரோதமாக இஸ்ரேலுக்குள் பிரவேசித்தவர்களெனவும், இஸ்ரேல் வானொலி தெரிவித்தது. இஸ்ரேலிய சிறைகளிலுள்ள ஆயிரக் கணக்கான பலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்யவேண்டுமெனவும், இதன்மூலம் இஸ்ரேல் பலஸ்தீனத்துடனான நல்லுறவைப் பேணலாமெனவும் பலஸ்தீன நிர்வாகம் கோரிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 2004 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்!

## ரைம்ஸ் பத்திரிகை தகவல்



அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் ஒப்பிடமுடியாத தலைமைப் பதவியும், அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு மக்கள் அளித்த தெளிவான ஆதரவும், அவரை 2004 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்ற நிலைக்கு உயர்த்தியுள்ளது. அவரது, தன்னிகரில்லாத் தலைமை காரணமாக வெள்ளை மாளிகையில் மேலும் 4 ஆண்டுகள் ஜோர்ஜ் புஷ் பதவி நீடிக்க மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்துள்ளனர் என்று ரைம்ஸ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேபோல் 1990 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்ற பெருமையை முன்னாள் அமெரிக்க அதிபரும், தற்போதைய அமெரிக்க அதிபரின் தந்தையுமான ஜோர்ஜ் எச்.டபிள்யூ புஷ் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.




# சீன சுரங்க வெடிவிபத்தில் 14 தொழிலாளர் உயிரிழப்பு

சீனாவில் நிலக்கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 14 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை சீனாவின் மேற்கு மாகாணமான சிச்சுவானில் இடம்பெற்றதாகச் சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த வெடிவிபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவராத போதிலும், சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் வெடிவிபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுவது வழமைதானெனச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த மாதத்திலும் சீனாவின் சானக்ஷி மாகாணத்தில் இடம்பெற்ற நிலக்கரிச் சுரங்க வெடி விபத்தில் 166 தொழிலாளர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரத்தில் சீனா வெளியிட்ட அறிக்கையின்படி இந்த வருடத்தில் 5200 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிததுள்ளது. சீனாவின் வளத்தை மேம்படுத்துவதற்காகச் சுரங்கத் தொழிலாளர்கள் தமது உயிரைத் தியாகம் செய்துவருவதாக விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

# சங்கரராமன் கொலை சூத்திரதாரி அப்பு நேற்றுமுன்தினம் கைதானார்



(சென்னை)

காஞ்சிபுரம் சங்கரராமன் கொலை வழக்கில் முக்கிய குற்றவாளியான அப்புவை ஆந்திராவில், தமிழகப் பொலிஸார் கைதுசெய்தனர். சித்தூர் அருகே பாலகிருஷ்ணாபுரத்திலுள்ள தனது பண்ணை வீட்டில் இருந்த அவரைப் பல்வேறு வட்டமாகப் பாதுகாப்பு வளையம் அமைத்து ஆந்திரப் பொலிஸாரின் உதவியுடன் தமிழகப் பொலிஸார் பிடித்ததாகத் தெரியவந்துள்ளது. எனினும், பொலிஸ் நிலையத்தில் அவர் சரணடைந்ததாகவும் மற்றொரு தகவல் கூறுகிறது.

பல நாட்களாகப் பொலிஸாரால் தேடப்பட்டுவந்த அப்பு, நேற்றுமுன்தினம் திடீரென யாரும் எதிர்பாராத வகையில் கைதுசெய்யப்பட்டார். இதன்மூலம் அப்பு தேடுதல் வேட்டை முடிவுக்கு வந்துள்ளது.

சங்கரராமன் கொலை வழக்கில் 22 பேர் குற்றவாளிகள். முக்கிய குற்றவாளியாகக் காஞ்சி சங்கராச்சரியார் ஜெயேந்திரர் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் உட்பட 20 பேர் கைதுசெய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். கொலைச் சதியை நிறைவேற்றியது, கொலையாளிகளுக்குக் கூலிப்பணம் வழங்கியது என வழக்கில் முக்கிய குற்றவாளிகளான இரண்டுபேர் தலைமறைவாகியிருந்தனர். பல இடங்களில் பொலிஸார் விரித்த வலைகளில் சிக்காமல் இரண்டுபேரும் தப்பிவிட்டனர். ஆனால், பொலிஸார் தங்களது முயறசியைக் கைவிடவில்லை. தேடுதல் வேட்டையைத் தொடர்ந்தனர். வழக்கில் முக்கிய குற்றவாளி அப்பு கிருஷ்ணசாமி நேற்றுமுன்தினம் மாலை சுற்றிவளைப்பில் கைது செயயப்பட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆந்திர மாநிலம் சித்தூர் அருகேயுள்ள பெனுமூர் பாலகிருஷ்ணாபுரத்தில் அவரைச் சுற்றிவளைத்துப் பிடித்ததாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் அப்புவை பொலிஸார் சுற்றிவளைக்கவில்லை அவரே சரணடைந்தார் என்ற தகவலும் வெளியானது.

டெல்கியில் தங்கியிருந்த அப்புவை அழைக்க அவரது குடும்பத்தினரிடம் பொலிஸார் பேச்சு நடத்தினர். விசாரணையில் துன்புறுத்த மாட்டோம் என்று உறுதியளித்த தன் பேரில்தான் அப்பு டெல்கியில் இருந்து பெங்களூர் வழியாக சித்தூர் வந்ததாகக் கூறப்படுகிறது.

சங்கரராமன் கொலை வழக்கில் தேடப்படடுவந்த முக்கிய குற்றவாளிகள் இருவரில் அப்பு மட்டுமே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒப்பந்தக்காரர் ரவி சுப்பிரமணியம் இன்னமும் தலைமறைவாகியுள்ளார். அப்பு பிடிப்பட்டுவிட்டதால் ரவி சுப்பிரமணியமும் விரைவில் கைதுசெய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

'நான் அப்பாவி, அடுத்த இரண்டு நாட்களில் உண்மை என்ன என்பதை வெளியிடுவேன்' என கைது செய்யப்பட்ட அப்பு தெரிவித்தார். கைதுசெய்யப்பட்ட அப்புவை பொலிஸார் அழைத்துச் சென்றபோது அவர் வீட்டின் முன்பு கூடியிருந்தவர்களிடம் இவ்வாறு தெரிவிததார்.

# ஈராக்கில் குண்டுவெடிப்பில் பாதிப்படைந்த ஷியா முஸ்லிம்கள் அமைதிபேணவேண்டும்

## மதத் தலைவர்கள் கோரிக்கை



ஈராக்கின் நஜாவ் மற்றும் கர்பலா நகரங்களில் இடம்பெற்ற இருவேறு கார்க்குண்டுத் தாக்குதல்களில் சுமார் 60 பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவமானது ஷியா முஸ்லிம்கள் மீதான பழிவாங்கும் தாக்குதல்கள் எனவும், எனவே ஷியா முஸ்லிம்களைப் பழிவாங்கும் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளாமல் அமைதிகாக்குமாறு ஷியா தலைவர்கள் கோரியுள்ளனர்.

ஷியா முஸ்லிம்கள் வாழும் பகுதிகள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்கள் சுனி முஸ்லிம்களாலேயே நடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது. நஜாவ் நகரில் மரண ஊர்வலம் ஒன்றில் கலந்துகொண்டவர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 48 பேர் கொல்லப்பட்டதுடன், 90 பேர் காயமடைந்தனர்.

இதேபோன்று கர்பலா நகரின் பிரதான பஸ் தரிப்பிடமொன்றில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 13 பேர் கொல்லப்பட்டும், 30 பேர் காயடைந்தனர்.

இந்த இரண்டு தாக்குதல்களையும் கண்டித்த ஷியா முஸ்லிம்களின் மதத் தலைவர், ஆயதுல்லா மொகமட் அல் ஹக்கீம், தேர்தல் முடியும்வரை ஷியா முஸ்லிம்களை அமைதிகாக்குமாறு கேட்டுள்ளார்.

இதேவேளை ஈராக்கில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்தலைத் தாம் பகிஷ்கரிக்கவுள்ளதாக சுனி முஸ்லிம் தலைவர்கள் சிலர் அச்சுறுத்தியுள்ளனர்.

அமெரிக்கப் படைகளுக்கும் , கிளர்ச்சிவாதிகளுக்குமிடையே சுனி முஸ்லிம்களின் பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் மோதல்களினால் திட்டமிட்ட தேர்தல் வாக்களிப்பு பாதிக்கப்படக்கூடும் எனவும் அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தாக்குதல்களினால் தேர்தல் பணியாளர்கள் தமது பணியை இடை நடுவில் கைவிடமாட்டார்களெனவும், தேர்தல் பணிகள் தொடர்ந்து நடத்தப்படுமெனவும், தேர்தல் ஆணையகப் பேச்சாளர் பாரீத் அயர் தெரிவித்தார்.



அத்துடன் தேர்தல் பணிகளில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். பெருமளவான ஈராக்கியர்கள் தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று தமக்கு விருப்பமான வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதையே விரும்புகின்றனர் என நான் நினைக்கின்றேன். இவர்களின் இந்த முடிவு எமது பணிகளை நாம் செய்வதற்கு எம்மை மேலும் ஊக்கப்படுத்துமெனவும் தெரிவித்தார்.

இதனிடையே நேற்றுமுன்தினம் தலைநகர் பாக்தாத்தில் மூன்று தேர்தல் பணியாளர்கள் காரில் சென்றவேளை கடத்தப்பட்டு, துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்காவில் தாயின் வயிற்றைக் கிழித்து

# திருடப்பட்ட குழந்தை தந்தையிடம் ஒப்படைப்பு

8 மாதக் கர்ப்பிணிப் பெண்ணைக் கொன்று அவா வயிற்றைக் கிழித்துக் குழந்தையைத் திருடிச் சென்ற பெண்ணிடமிருந்து குழந்தையைமீட்டு அதன் தந்தையிடம் பொலிஸார் ஒப்படைத்தனர்.

அமெரிக்காவில் மிசோரி நகரைச் சேர்ந்தவர் ஜெபுலோன் ஸ்டின்னெட். இவரது மனைவி பாபிஜோ. 23 வயதான இந்தப் பெண் 8 மாதக் கர்ப்பிணி ஆவார்.

இவர் தன் வீட்டில் இரத்த வெள்ளத்தில் பிணமாகக் கிடந்தார். அவரது வயிற்றைக் கிழித்து தொப்புள் கொடியை அறுத்துக் குழந்தையை யாரோ திருடிச்சென்றிருந்தனர். இதைப் பாபியின் தாயார் பெக்கி ஹார்ப்பர்தான் முதலில் பார்த்துவிட்டுப் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தார்.

பாபிஜோ நாய்களை வளர்த்து விற்பனை செய்து வந்தார். நாய்க் குட்டியை வாங்குவது தொடர்பாக ஒரு பெண் கணினியில் தொடர்பு கொண்டு பாபியின் வீட்டு முகவரியை விசாரித்தார். அவர் வந்து நாய்களைப் பார்த்தார். இந்தத் தகவலை பெக்கி ஹார்ப்பர் பொலிஸிடம் தெரிவித்தார்.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து பிணத்தைப் பார்த்தபோது, பாபிஜோவின் பின்பக்கமாக இருந்து அவர் கழுத்து நெரிக்கப்பட்டதன் அடையாளங்கள் உடலில் இருந்தன. பாபிஜோவின் இரு கைகளிலும், கொலையாளியின் தலை முடிக்கற்றைகள் இருந்தன.

இந்தக் கோரக் கொலை பற்றி அமெரிக்கா முழுவதும் உள்ள பொலிஸார் உஷார்ப்படுத்தப்பட்டனர். இணையத்தளத் தகவல் தொடர்பு மூலம் 24 மணி நேரத்தில் பொலிஸார், குழந்தையைத் திருடியவரையும், குழந்தையையும் கண்டுபிடித்துவிட்டனர்.

கன்சாய் மாநிலத்தில் மெல்வேர்ன் நகரில் லிசாமாண்ட் கோமெரி என்ற 36 வயதுப் பெண்ணிடம் குழந்தை இருந்தது. அந்தப் பெண்தான் பாபியைக் கொலை செய்துவிட்டு, வயிற்றுக்குள் இருந்த குழந்தையைத் திருடியவர் என்பதும் தெரியவந்தது. குற்றத்தைப் பொலிஸாரிடம் லிசா ஒப்புக்கொண்டார்.

லிசாமாண்ட் கோமேரிக்கு ஏற்கனவே கரு உண்டாகி, அது வயிற்றிலேயே இறந்துபோனது. அதனால் மனம் நொந்துபோய் இருந்த லிசா, குழந்தையைத் திருடிக்கொண்டு விடாபேகா நகருக்கு வந்தார். அங்கு இருந்தபடி கணவர் கெவினுடன் தொடர்புகொண்டு, எதிர்பாராத விதமாகக் குழந்தையைப் பெற்றெடுத்திருப்பதாகவும், டெபேகா ஹொட்டேலில் தங்கியிருக்கும் தன்னையும், குழந்தையையும் வந்து பார்க்கும்படியும் கூறினார்.

அதன்பின கெவின் அங்குசென்று மனைவியைச் சந்தித்தார். பின்பு குழந்தையையும் மனைவியையும் அழைத்துக் கொண்டு சொந்த ஊர் திரும்பினார். கணவருடன் இணையதளம் மூலம் தொடர்புகொண்டதை வைத்துத்தான் பொலிஸார் அவரைக் கண்டுபிடித்தனர்.

லிசாவிடம் இருந்த குழந்தையைப் பொலிஸார் மீட்டு, அதனைத் தந்தையிடம் ஒப்படைத்தனர். அந்தக் குழந்தைக்கு விக்டோரியா ஜோஸ்டின்னெட் என்று பெயர் சூட்டப்பட்டது. கன்சாசில் டொபேகா நகர மருத்துவ மனையில் குழந்தை சேர்க்கப்பட்டது. குழந்தை ஆரோக்கியத்துடன் இருப்பதாக டொக்டர்கள் கூறினர். குழந்தை உயிர் பிழைத்தது அதிசயம்தான் என்று தந்தை ஜெபுலோன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அமெரிக்க பிரதித் தூதுவர் இன்று திருமலை விஜயம்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பிரதித் தலைவர் ஜேம்ஸ்.எவ்.என்.வைஸ்ரல் இன்று திருமலைக்கு விஜயம் செய்து பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்படி இன்று காலை 9.30 மணிக்கு மிகிந்தபுரத்திலுள்ள அரச தொழில்நுட்பக் கல்லூரிக்கு செல்லும் அவர் அங்கு யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள தொழில்நுட்பக்கல்லூரிக்கான அடிக்கல்லை நாட்டவுள்ளார்.

இதன் பின்னர் காலை 10.30 மணியளவில் திருமலை நகரத்தில் அமைந்துள்ள இந்து மயானம், பொது மயானம் மற்றும் முஸ்லிம் மையவாடி ஆகிய மூன்று மயானங்களுக்குமான பெயர்ப் பலகையை திறந்து வைப்பார்.

பின்னர் மாலை 2.30 மணியளவில் பன்குளம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள நாமல்வத்தை கிராமத்தில் யு.எஸ்.எயிட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் மற்றும் 2 கிணறுகள் என்பவற்றையும் மக்களுக்கு கையளிக்கவுள்ளார். அத்துடன் அந்தப் பகுதியில் இருந்த குளம் புனரமைக்கப்பட்ட நிலையில் இதனையும் மீள் பாவனைக்காக திறந்துவைக்கவுள்ளார். (04)

## முஸ்லிம் இளைஞர் அடித்துக் கொலை!

(அம்பாறை)

அடித்துக் கொலைசெய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுமுன்தினம் அம்பாறையில் மீட்கப்பட்டது.

அமபாறை - மூன்றாம் குறிச்சியைச் சேர்ந்த மொஹமட் நசார் (வயது 28) என்பவரே அடித்துக் கொலைசெய்யப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் இரவு தனக்கு வந்த தொலைபேசி அழைப்பொன்றை அடுத்து வெளியே சென்ற அவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று விஜயம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து ஆராய்வதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று அந்த மாவட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இவருடன் அமைச்சர் பேரியல் அஷ்ரப் உட்பட நிவாரணப் பணிகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

ஹெலிகொப்ரர் மூலம் முதலில் அம்பாறைக்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ - அம்பாறை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் ஹேரத் அபயவிக்ரம தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட மாநாடொன்றில் கலந்து கொண்டார்.

இந்த மாநாட்டில் பிரதேசசெயலாளர்களும் கலந்துகொண்டு பாதிப்புக்கள் குறித்து விளக்கமளித்தனர். இந்த மாவட்டத்தின் நிவாரணப் பணிகளுக்காக 17 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான நிதியை ஒதுக்குமாறு திறைசேரியிடம் பிரதமர் கேட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்துக்கான விஜயத்தை முடித்துக்கொண்ட பிரதமர், அங்கிருந்து நேரடியாக மட்டக்களப்புக்குச் சென்றார்.

அங்கு 23-2 ஆவது இராணுவப் படைப் பிரிவு தலைமையகத்தில் நிவாரணப் பணிகள் குறித்து அரசாங்க அதிபர் வே.சண்முகம் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் ஆராய்ந்தார்.

ஆனாலும், இந்த இரண்டு மாவட்டங்களிலும் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இடங்களையோ பாதிக்கப்பட்ட மக்களையோ அவர் சென்று பார்வையிடவில்லை.

இதேவேளை - மட்டக்களப்பில் வெள்ளப் பாதிப்புக்களை பார்வையிட வந்த பிரதமரின் நிகழ்வை செய்தியாக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் படையினரால் அனுமதிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் மட்டக்களப்பில் 233 ஆவது படைப்பிரிவின் தலைமையகத்தில் நடத்திய உயர்மட்ட மாநாட்டுக்கு ஊடகவியலாளர்களை அனுமதிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டபோதும் அதற்குப் படையினர் இணங்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

233 ஆவது படைப்பிரிவின் அலுவலக மண்டபம் வரையில் ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட்டு பின்னர் திருப்பியனுப்பப்பட்டனர்.

இந்த உயர்மாநாட்டில் - பிரிகேடியர் விஜேகுணவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வி கே.தங்கேஸ்வரி, எஸ். ஜெயானந்தமூர்த்தி, ரி.கனகசபை, பி.அரியநேந்திரன் ஆகியோரும் அரச உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# எஸ்.பி.க்கு வழங்கிய தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றில் மனு !

(கொழும்பு)

எஸ்.பி. திஸாநாயக்க மீது கடுழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னணியை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் கருத்துரைத்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்-

எஸ்.பி திஸாநாயக்க மீதான தீர்ப்பின் பின்னர் எழுந்துள்ள அந்தத் தீர்ப்பின் பின்னணியிலான அழுத்தங்கள் தற்சமயம் வெளிப்பட்டிருக்கின்றன. இந்த அழுத்தமே வழக்கின் தீர்ப்பை மாற்றும் நிலையை ஏற்படுத்தியுள்ளது. எஸ்.பி. திஸாநாயக்கவின் வழக்கின் போது பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இது உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

எனவே, இதுதொடர்பாக உயர் நீதிமன்றம் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும். இதற்கிடையில் திஸாநாயக்க மீதான தீர்ப்பு சர்வதேசத்துக்கு முன்பாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கடந்த வாரம் இந்த விடயத்தை பிரசல்ஸில் உள்ள ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் கண்டித்தனர். இதனையடுத்து இந்த விடயம் அடுத்த வாரத்தில் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் ஆணையகத்துக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு குறிப்பிடத்தக்க மக்கள் பெரும்பான்மை இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். இந்த நிலையில் எதிர்க் கட்சிகளை சூழ்ச்சியின் அடிப்படையில் தம்பக்கம் இழுக்கும் நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக அவர் குற்றஞ் சுமத்தினார்.

அமைச்சர் அனுர பண்டாரநாயக்க இன்னும் 10 வருடங்களுக்கு தமது சகோதரியே நாட்டை ஆளப்போவதாகவும் இந்தக் காலகட்டத்தில் தேர்தல் நடைபெறப் போவதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இது ஜனநாயக மரபை மறுக்கும் செயலாகும் மக்கள் மத்தியில் 47 வீதமான வாக்குகளை மாத்திரமே பெற்ற இந்த அரசாங்கம் தேர்தல் ஒன்றை சந்திக்க விரும்பாமையானது அதற்குத் தேர்தல் குறித்த பயம் உள்ளதே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பேச்சுக்கு பதிலாக...

ஹெலஉறுமய ஆகிய கட்சிகள் மட்டுமல்ல சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றது. அரசு ஊடகங்கள் தமிழ் மக்களுக்கும் அவர்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுக்கும் எதிரான செய்திகளைத் திட்டமிட்டுப் பரப்பி வருகின்றன. மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியல் பேரம் பேசும் பலத்தை குறைக்கும் நடவடிக்கைகளை தமிழ் விரோதக் குழுக்கள் கனகச்சிதமாக மேற்கொண்டு வருகின்றன.

இதேவேளையில் அரசு தனது படைகளையும், சிங்கள மக்களையும் யுத்தத்துக்குத் தயார்ப்படுத்தும் நடவடிக்கையில் முனைப்புடன் ஈடுபடுவதாக தமிழ் மக்கள் உணர்ந்துள்ளார்கள். கொடிய யுத்தத்தின் மூலம் தமிழ் மக்களை அடக்கி ஆள்வதே சிங்களப் பேரினவாதிகளின் அடிப்படை நோக்கம். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக அகிம்சை வழியில் நடத்திய போராட்டங்கள் அரச பயங்கரவாதிகளால் அடக்கப்பட்டன.

தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைமைகளுடன் செய்து கொணட ஒப்பந்தங்கள் அமுல்படுத்தப்படாமல் ரத்துச்செய்யப்பட்டு, தமிழ் தலைவர்களும், தமிழ் மக்களும் தொடர்ச்சியாக சிங்களத் தலைமைகளினால் ஏமாற்றப்பட்ட வரலாற்றை நாம் அனைவரும் அறிவோம்.

அத்துடன் நின்று விடாமல் தமிழ் மக்கள் மீது இன வன்முறைகளைத் தொடர்ச்சியாகக் கட்டவிழ்தது விட்டு வகை தொகையாக கொன்றொழிக்கப்பட்ட வரலாற்றையும் நாம் அறிவோம். இந்த நிலையில்தான் தமிழ் தேசியத்தைப் பாதுகாப்பதற்காக தமிழர் தாயகத்தில் ஓர் ஆயுதப் போராட்டம் வெடித்தது.

தமிழர்களாகிய நாம் யுத்தத்தை வெறுக்கின்றோம். அதேவேளை எமது அரசியல் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக உள்ளோம். சமாதான வழியிலே அந்த உரிமைகளைப் பெறுவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கு தமிழினம் தயாராக இருக்கும் இந்த வேளையிலே மீண்டுமொரு யுத்தத்தை தமிழ் மக்கள் மீது திணிக்கும் அரசின் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எனவே, தமிழ் மக்களாகிய நாங்கள் இந்தத் தருணத்தில் அரசுக்கும், சர்வதேசத்துக்கும் கூறிக் கொள்ளும் செய்தி என்னவெனில்- எங்கள் உரிமைகளைப் பெறுவதில் உறுதியாக இருக்கும் எம்மீது யுத்தமொன்று திணிக்கப்படுமேயானால் தமிழ் மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு அதை எதிர்கொள்ளவும் தயாராக உள்ளோம் என்பதை இந்த மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் மூலம் நாம் எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, இனியும் காலங்கடத்தாது இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பித்து, தமிழ் மக்களுக்கு இயல்பு வாழ்கையையும், சமாதானத்தையும் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை மேற்கொளளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று அந்த மகைஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (29)

## கிழக்கில்...

விநியோகிக்கப்படவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதிர்வரும் 26 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பொருட்கள் கிடைக்கத்தக்க வகையில் அனைத்துத் தரப்பினரும் உதவ முன்வருமாறும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## புலிகள் — நோர்வே...

சமாதானத்திற்கான உலக கூட்டமைப்பினால் மாநாடொன்று நடத்தப்பட்டிருந்தது.

இந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போக்குடைய உள்நாட்டு வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்ட்போர்க்கிற்கும் இடையில் இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் மற்றும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டேயுடன் இடம்பெற்ற உரையாடல் என்பன ஒட்டுக்கேட்கப்பட்டு ஒலிப் பதிவு செய்யப்பட்ட நாடா ஒன்று போட்டுக் காண்பிக்கப்பட்டது.

இந்த உரையாடல் எவ்வாறு கிடைத்தது என்பது குறித்து இராஜதந்திர வட்டாரங்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

## பேச்சுக்களை...

சிதம்பரநாதன், சிவனேசன் ஆகியோர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைபின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து சமாதானத்தை முன்னெடுக்குமாறு வலியுறுத்தி உரையாற்றினர்.

தொடர்ந்து ஜனாதிபதிக்கான மகஜரை சாவகச்சேரி தேசிய எழுச்சிப் பேரவைத் தலைவர் தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசனிடம் கையளித்தார். அவர் தன்னிடம் ஒப்படைத்த மகஜரை ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதாகத் தெரிவித்தார்.

இந்தச் சமாதானத்தை வலியுறுத்தும் மக்களின் எழுச்சிப் போராட்டத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் பங்குகொண்டதால் சாவகச்சேரி நகரிலுள்ள அனைத்து அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் சுமார் இரண்டு மணிநேரம் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டன.

பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

## இரட்டை...

வரும் ஜே.வி.பி இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்குத் தடையாக இருந்து வருகிறது. அதேநேரம் ஜே.வி.பியின் நிலைப்பாட்டுக்கு மத்தியில் இருந்து கொண்டு ஜனாதிபதி என்ன தீர்மானத்தை மேற்கொள்ளப் போகிறார் என்பதையும், ஐ.தே.கட்சி அவதானித்துக் கொண்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரையில் ஐக்கிய இலங்கையில் ஒற்றையாட்சியின் கீழ் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறது.

ஜனாதிபதியும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளாரெனில், ஜே.வி.பியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் - சமாதானப் பேச்சுவார்த்தையை அவர் முன்னெடுத்துச் செல்வாராக இருந்தால் அதற்கு எமது கட்சி ஒத்துழைப்பை வழங்குமென்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது. (01)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 21.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.